Free Website :
for Matrialmonial Website

micheaijulian@facebook.com
www.indianadarmurasu.com

மே-2024
நாடார் :14
முரசு :5



# இந்தியன் நாடார் முரசு
INDIAN NADAR MURASU

விலை ரூ.15/-

Celebrating 37 Years of Educational Excellence

# ANNAI VEILANKANNI'S COLLEGE FOR WOMEN

81, VGP SALAI, WEST SAIDAPET, CHENNAI - 15

**Affiliated to University of Madras | Accredited to NAAC**

ADMISSIONS 2024 OPEN

SCAN TO APPLY



## CAMPUS LIFE

Annai Veilankanni's College for Women is situated in Saidapet, a prime locality that has train and bus commutes in close proximity. The college is affiliated with the University of Madras, one of the oldest and most prestigious universities in India.

**Key Features**

- Safe and Green Campus
- Government & Management Scholarships and fee concessions
- Alumni adoption scheme
- Skill Enhanced Training by AVASDCS
- Pre-Placement training and campus placement opportunities
- Earn While you Learn (Part time Job)
- Guest lectures / Workshops/ Seminars by eminent educationists / Industrialists
- Internship training in reputed Industries and Hospitals
- Industry academia collaboration through MoUs
- Digital Library
- Encouraged to participate in extracurricular activities
- Online courses through Swayam / NPTEL
- Hostel facility inside the campus

## PLACEMENT Our Proud Alumni

**Vaishali R** – Team Lead – Cognizant Technology Solutions – Pay Scale : 14 Lacs pa

**Hemamalini K** – Customer Support Senior Associate – Sutherland Global Services – Pay Scale : 3 Lacs pa

**Kaviya S** – Banking Operations Senior Associate – Accenture – Pay Scale : 3.4 Lacs pa

**Anupama R** – Internal Audit Executive – GRT Jewellers India Private Limited – Pay Scale : 3.6 Lacs pa

**Jayashree N** – Financial Process Associate – Accenture – Pay Scale : 3.5 Lacs pa

**Keerthana T** – Associate Financial Analyst – Ascensus – Pay Scale : 3.30 Lacs pa

**Kavitha A** – Senior Process Executive – Cognizant Technology Solutions – Pay Scale : 3.2 Lacs pa

**Bharathi. P** – Subject Matter Expert-Soft skills – L&T-Larsen &Toubro – Pay Scale : 3.8 Lacs pa

## PROGRAMMES OFFERED

**DAY SHIFT** 8.40 am - 2.00 pm

**UG**

- **B.Com** – Commerce, Corporate Secretaryship, Information Systems Management, Accounting & Finance, Computer Applications
- **B.Sc.** – Computer Science, Maths, Biochemistry
- **BA** – English
- **BCA**
- **BBA**

**PG**

- **M.Sc** – Biochemistry, Computer Science
- **M.Com**
- **MAHRM**

**EVENING SHIFT** 01.00 pm - 05.00 pm

- **B.Com** Commerce
- **BCA**

## OUR TOP RECRUITERS

SUTHERLAND, Forte, SHRIRAM General Insurance, Bhumi, Tech Mahindra, Aditya Birla Group Home Finance, SBI Life Insurance, Workontrix, The English Academy, Blue Dart DHL, Star Health, sitel, GRT Jewellers, CIEL, dataint, Altruist, cognizant, IJL India Japan Lighting Pvt Ltd, kotak, Aussie Digital Business Systems, Barclays, SIMS, noou, MedPlus, HDB Financial Services, Cameo, accenture, Foxconn, SSLF, LIC, HTC Global Services, Quess, ascensus

**Annai Veilankanni's College for Women**
81/33, VGP SALAI, WEST SAIDAPET, CHENNAI - 15
E-mail : dev@annaiveilankannis.com Website : www.annaiveilankannis.com

Call 92821 44444
Helpline 044 - 43523712

✞

# 62 வது வருட மணநாள் வாழ்த்துக்கள்

எங்களை வாழ வைத்த தெய்வங்களான எமது பெற்றோர்

## D.M. ஜேம்ஸ் மார்ட்டின் - இனிகோ மேரி (விண்ணில்)



இவர்களின் **62-வது மண நாளில்** அவர்களின் பொற்பாதம் வணங்குகிறோம். எங்களுக்கும் எங்கள் பிள்ளைகளுக்கும் உயர் கல்வி தந்து, அனைவரையும் அவயத்து முந்தியிருக்கச் செய்தவர்கள் எங்கள் பெற்றோர். எங்களுடன் வாழும் எம் தந்தை, நூறாண்டு காலம், நோய் நொடிகள் இல்லாமல் வாழ பிரார்த்திக்கிறோம்.

மணநாள் :

**16–5–1962**

மண இடம் :

**பரிசுத்த திருக்குடும்ப தேவாலயம், வடக்கன் குளம்.**

| மக்கள் | மருமக்கள் |
|---|---|
| **ஜே. ஜேக்குலின்,** M.Sc.,M.Ed.,M.Phil. | – **அருள்ராஜ்,** M.A.,M.BA.,B.G.L |
| **Dr. ஜே. ஜேனி சோபியா,** D.G.O. | – **Dr. வெஸ்லிஜேசு குமார்,** B.D.S. |
| **ஜே. ஜேன்சிரோசனா,** B.Sc.,B.Ed. | – **எட்வின் பெலிக்ஸ் பிரின்ஸ்,** M.A.,B.Ed. |
| **ஜே. ஜூலியஸ் சேவியர் ஸ்காட்,** M.D.,D.C.H. Dip.N.B.(Paed.) Hemato- Oncology (Australia) | – **ஜெனட்லின் ப்ருந்தா,** M.Sc.,M.Phil. |

பேரப்பிள்ளைகள் :

Dr. **Jiju Antony,** *M.D. (ANES)*

Dr. **W. Ajay Sam,** *M.D. (Gen. Med.)*
Dr. **Blessy Sheba,** *M.D. (ANES)*
Er. Mrs. Fiona **E. Josy,** *M.E.*
Er. **Vimal,** *M.C.A.*
Selvi **Shriya Vency Scott**

Dr. **Ritu Martini,** *M.B.,B.S.,Dip.NB.,(ANES)*
Dr. **Jeric Ashwin,** *M.S.(ENT)*
Selvi **Ajina Sam,** *M.D.R.D.*

Dr. Romario **E.Jery,** *MDS.*

Selvi **Shanya Scott**

கொள்ளுபேரன் : **V. Louie Madav Ogistan** · **Ryan Martin**

அகில உலக நாடார்களின் செய்திக்களஞ்சியம்

R.Dis.NO.1434/09

# இந்திய நாடார் முரசு

சமுதாய பல்சுவை மாத இதழ்

கௌரவ ஆசிரியர்: **விஜய்வசந்தகுமார்.**

பேராசிரியர்: **திரு.ஜூலியன் நாடார்**

ஆசிரியர்: டாக்டர்.J.*அர்னால்ட் அரசு ஜூலியன்*

துணை ஆசிரியர்:திருமதி.எல்மாமதி.,எம்.ஏ.பி.எட்

இணை ஆசிரியர்:ரேஷ்மாமதி M.Sc.,(U.S.A)

இலக்கிய ஆலோசகர்: கலைமாமணி திரு.தாமரை செந்தூர்பாண்டியன்

சட்ட ஆலோசகர்:

Dr.தே.தேவ் ஆனந்த். MBA.,M.Com.,MHRM.,MSW., ML., Ph.D.,

செயலாளர்,அன்னைவேளாங்கண்ணி கல்வி நிறுவனங்கள், சென்னை-15.

ஆலோசனைக் குழு:

திருமதி.ராணிவெங்கடேசன் முன்னாள் MLA

டாக்டர்.S.தேவராஜ் Chairman

Annai Veilankanni's Group of Educational Institutions

R.K.காளிதாஸ் தலைவர்.தெக்ஷிணமாற நாடார் சங்கம், மாவட்டதலைவர்: தென்காசி, திருநெல்வேலி மாவட்ட வர்த்தக கழகம், தலைவர், பெருந்தலைவர் காமராஜர் தினசரி மார்கெட் பாவூர்சத்திரம்., அமைப்பாளர்: தென்காசி மாவட்ட அனைத்து சமுதாய ஆலோசனை கமிட்டி.

திரு.பி.சின்னமணி நாடார்

தலைவர், சென்னைவாழ் நாடார் சங்கம்

டாக்டர் வி.ஜி.சந்தோஷம்

டாக்டர்.குமரேசன்

போரூர் ஆனந்தராஜ்

தலைவர் நெ.தூ.நா.மகமை பரிபாலன சங்கம்.

தலைமை அலுவலகம்:

**புதிய எண்:1, ப.எண்:21, கிருஷ்ணப்ப நாயக்கன் தெரு, மேட்டுப்பாளையம்,மேற்கு மாம்பலம், சென்னை-600 033.**

**போன்:044-23810610 (வீடு)**

**E-mail:nadar10_2000@yahoo.com, indianadarmurasu@yahoo.com**

தலைமை வியாபார அலுவலகம்:

**30, தேரடி தெரு, சைதாப்பேட்டை, சென்னை-600 015.**

**போன்: 044-23811087,**

**அலுவலக நேரம்:10.00am to 9.00pm**

இந்திய நாடார் முரசுக்காக அச்சிட்டு வெளியிடுபவர்
டாக்டர்.திரு.K.M.J.A.அரசு, ஜூலியன்.

அலுவலக நிர்வாகம், கம்ப்யூட்டர்: திருமதி.G.சத்தியாபுரூஷோத்தமன்,M.A.,B.Ed



ALL RIGHTS RESERVED LEGAL JURISDICTION CHENNAI CITY COURTS ONLY. NOTHING INDIA NADAR MURASU IS INTENED TO DEFAME ANY PERSON. BUT EXPRESSED IN GOOD FATH, PURSUIT OF TRUTH AND PUBLIC GOOD.

எந்த வகையிலும் மறுபதிப்பு செய்தல் தடை செய்யப்படுகிறது. கதைகளில் வரும் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே. கதை, கட்டுரை முதலியன எதையும் தபால் அல்லது மின் அஞ்சல் மூலமாக அனுப்பவும். அவற்றை திருத்தி அமைக்கவும், சுருக்கவும் ஆசிரியருக்கு உரிமை உண்டு. வெளியூர் சந்தாதாரர்கள் தபால் மூலமாகவோ, காசோலையாகவோ அனுப்பி வைக்கவும். அறிமுகம் இல்லாதவர்களிடம் சந்தா மற்றும் விளம்பரத் தொகையை கொடுத்து ஏமாற வேண்டாம்.



| | | |
|---|---|---|
| வெளி முன் அட்டை | (17X24 CMS) | ரூ. 25,000 |
| வெளி பின் அட்டை | (17X24 CMS) | ரூ. 15,000 |
| உள் அட்டை | (17X24 CMS) | ரூ. 10,000 |
| முழுப்பக்கம் | (17X24 CMS) | ரூ. 5,000 |
| அரைப்பக்கம் | (17X12 CMS) | ரூ. 2,500 |
| கால்பக்கம் | ($8^{1/2}$X12 CMS) | ரூ. 1,500 |
| அரைக்கால்பக்கம் | ($8^{1/2}$X6 CMS) | ரூ. 900 |

ஆண்டு சந்தா- ரூ.550, 2ஆண்டு சந்தா-ரூ.1100
ஆயுள் சந்தா ரூ.15,000, 5 ஆண்டு சந்தா- ரூ.5000.
மலேசியா, சிங்கப்பூர், இலங்கை, கனடா,
தென் ஆப்பிரிக்கா மற்றும் அயல் நாடுகளுக்கு
ஆண்டு சந்தா/ ரூ.3000 அல்லது அமெரிக்கா டாலர்,$100
ஆயுள் சந்தா/ரூ.20,000 அல்லது அமெரிக்கா டாலர் $600

சந்தா அனுப்ப வேண்டிய வங்கி கணக்கு எண்:
The Karur Vysys Bank Saidapet Branch: MR.K.M.Julian
IFSC Code: KVBL0001651.

**A/c No: 1651173000000900**

**Google Pay : 9382172884 paytm 9382172884**


# ஆசிரியர் உரை

## சேர, சோழ, பாண்டியர் மற்றும் காமராஜர் வழி வந்த நாடார்களே!!!



அனைவருக்கும் தொழிலாளர் தினம் மற்றும் வணிகர் தின நல்வாழ்த்துக்கள்!

நாடார் சமுதாயத்தில் தான் அதிகமாக தொழிலாளர்களும், வணிகர்களும் உள்ளனர். நலிந்து போன சமுதாயம் பிறரால் மிகவும் வெறுப்பில் வாழ்ந்த சமுதாயம், யாருக்கும் கைக்கட்டி நிற்காமல் தனது சொந்த உழைப்பால் உயர்ந்த சமுதாயம், தற்காலத்தில் அனைவராலும் மதிக்கக் கூடிய சமுதாயம். நமது சமுதாயத்தினரை சாணார், பனையேறி என்று அழைக்கப்பட்டது இந்த நாடார் சமுதாயம். எந்த மனிதனும் செல்வாக்கிலும் செல்வத்திலும் முதன்மையாக உயர்ந்துவிட்டால் அரசியலில் இருந்து நாட்டை தலைமை தாங்கி ஆள்வதற்கும் தயாராகி விடுவது இயற்கையே. அந்த வகையில் நாடார்களும் மிக ஆர்வமாக இருக்கிறார்கள். ஆனால் அதற்கான வழிமுறைகளை பின்பற்றி நாம் கற்றுக் கொள்ளவேண்டும் தமிழகம் மற்ற ஜாதியினர் போல் நாம் அல்ல சிறிது வித்யாசமான ஒரு சமுதாயம் சுயமரியாதை மிக்கவர்கள் யாரையும் எளிதாக நம்பவோ, ஏற்றுக் கொள்ளவோ தயங்கும் ஒரு இனம் இருந்தாலும் நம்மவர்களுக்கு அரசியல் அறிவு போதாது என்றே தோன்றுகிறது. சிறு சிறு சங்கங்களாக நமது கூட்டங்களை சேர்த்து சங்கங்களை அமைத்து பொருளாதாரத்தில் முன்னேறிய நாம் அரசியலில் சாணக்கிய தனம் தெரியாமல் தோல்வியடைகிறோம். சாதியை வளர்க்கும் நாம் அரசியல் ஞானம் இன்றி தோல்வியடைகிறோம்.

மனிதன் காட்டுமிராண்டிகளாக வாழ்ந்த காலத்தில் மல்லர்களாகவும், மன்னர்களாகவும் தற்காலத்தில் ஜனநாயகத்தாலும் ஆளுகிறோம். ஜனநாயகத்தில் தலைவனுக்கு வேட்டு பலம் உதவி செய்யாது அதற்கு ஓட்டு பலம் தான் வேண்டும் ஓட்டை எப்படி பெறுவது என்ற ஞானத்தை கற்று கொள்ளாத வரை நாம் அரசியலில் தலைமை தாங்குவது கஷ்டம் நம்மிடம் சாதி தலைவர்களும் வணிகர்கள் பெயர் சொல்லி வணிக தலைவர்களும் பெருகி விட்டனர் அரசியலில் அறிவாளி அதிகமாக நம்புவது சாதி, மதம், அரசியல் என்ற மூன்று பெரிய ஆயுதங்கள். நம் சமுதாயம் சாதி மதம் அரசியல் என்ற மூன்று தாரக மந்திரத்தை மறைத்து வைத்துள்ளது. தற்கால நம் சாதி தலைவர்கள் பல அரசியல் தலைவர்களுக்கு அடிமையாகி நம்மவர்களை ஜாதிரீதியாகவும் மத ரீதியாகவும் பிரித்து ஆதாயம் தேடிக் கொள்வதால் நாம் ஜனநாயகம் தேர்தல்களில் விரோதிகளாக மாறி செயல்படும் சூழ்நிலை ஏற்படுகிறது. மற்றும் பிற சாதியினரை எதிரியாக பாவித்து செயல்படுகிறார்கள். மத ரீதியாக ஒருவருக்கொருவர் வெறுத்து ஒதுக்கவும் செய்துவிடுகிறார்கள் மேலும் அவர் நாடாரா? இவர் நாடாரா? என்று வேண்டாத கேள்வியை ஏற்படுத்துவதால் நம்மவர்கள் பிரிந்து செயல்படுகிறார்கள். இந்த செயல்களால் தலைவர்களுக்கு சிறிய ஆதாயம் இருக்கலாமே தவிர சமுதாயத்திற்கு இதனால் நன்மையோ, தீமையோ கிடையாது.

❍ ஆகவே என் சமுதாயமே உஷார்.

# உறவுகள்!

92. "டைட்டானிக்" கப்பல் தெய்வீகக் காதல் உறவு: மனித வாழ்க்கைப் பயணம் உலகப் பிரபல "டைட்டானிக்" கப்பலின் கடல் பயணம் போன்றது. பயணம் தொடங்கிய இடம் தெரியும். முடியும் இடத்தை, காலத்தை யாரும் அறிந்திருக்கவில்லை. உலகப் பெரும் பணக்காரர்கள் சிலர் அதில் பயணித்தார்கள். அவர்களோடு பிரிட்டன், அயர்லாந்து, ஸ்கேண்டிநேவியா மற்றும் ஐரோப்பா முழுவதிலும் இருந்து நூற்றுக் கணக்கானவர்கள் புதிய வாழ்வாதாரம் தேடி வட அமெரிக்கா நோக்கி அதில் பயணமானார்கள். ஆனால் மரணத்தைத் தேடிப் போகிறோம் என்று அவர்கள் யாரும் அறிந்திருக்கவில்லை. "டைட்டானிக்" ஆங்கிலத் திரைப்படம் வெளியானது. அதில் இளங்காதலர்கள் இருவரின் ஆத்மார்த்தமான காதல் கதையினைத் தத்ரூபமாகச் சித்தரித்து இருப்பார் பட இயக்குநர். இவர்களின் காதலன் கப்பல் விபத்தில் உயிரிழப்பதாகவும், காதலி தப்பிப் பிழைப்பதாகவும் காட்டியிருப்பார். காதலர் பிரிந்தாலும் அவர்களின் தெய்வீகக் காதல் இன்றும் மக்கள் மனதில் மானசீக நினைவில் படிந்து விட்டது போன்ற பிரமை. அதை உறவின் மகிமை என்றும் கருதலாம்.

வாழ்க்கையில் ஒவ்வொருவருக்கும் ஒரு தேடுதல். இதைத்தான் புத்தர் ஆசை என்றார் ஆசையை ஒழித்தால் துன்பங்கள் நீங்கும் என்றார். முற்றும் துறந்தால் தான் இறைவனை அடைய முடியும் என்று ஆன்மீகவாதிகள் போதிக்கின்றனர். அரசியல் மற்றும், சமூகப் புரட்சியை முன்நின்று நடத்திக் கொண்டே இறைவனை அடையும் தாகத்தை முதன்மையாக வைத்துச் செயல்பட்டார் காந்தி. சாதாரண மக்களுக்கு வள்ளுவர் போதிப்பது இல்லறத்தில் இருந்து கொண்டே இறைவனை நாட வேண்டும் என்பதுதான். அத்தனை புயல்கள், சூறாவளிகளோடு எதிர்கொள்ளவே விரும்புகிறேன். என்றார் பண்டிதர் நேரு. ஆனால் எவர் விதியும் எவர் கையிலும் இல்லை என்பதற்கு டைட்டானிக் பயணம் ஓர் உதாரணம். இருப்பவனும் அதில் அழிந்தான். இல்லாதவனும் அழிந்தான். சிறிது நேரத்தில் தாம் அழியப் போகிறோம் என்பதை இருசாராருமே அறிந்திருக்கவில்லை. தலைக்கு மேலே வெள்ளம் போனால் சான் போனால் என்ன, முழம் போனால் என்ன என்று கேட்பார்களே அதைப்போல் ! வாழ்க்கைப் பயணத்தில் நாம் புறப்பட்ட இடம் தெரியும் போய்ச் சேரும் இடம், காலம் தெரியாது. நம்மில் கோடீஸ்வரர்களும் உண்டு. வாழ்வாதாரம் தேடி அலையும் சாமானியர்களும் உண்டு இருசாராருக்குமே போய்ச் சேருமிடம் தெரியாது. அறியாமைதான் இருதரப்புக்கும் உள்ள பொதுச் சொத்து. இந்தச் சூழலில்தான் இறையருளின் அருமையும், மனித உறவுகளின் மாண்பும் மனிதர்களுக்குப் புரிந்தாக வேண்டும் என்பதன் முக்கியத்துவமும் நமக்கு விளங்குகிறது. மனித வாழ்க்கையின் போது வெறுமையும், அறியாமையும் நம்மைச் சூழ்கிறது.

இன்பமும் இறைவன்தான். துன்பமும் இறைவன்தான். இருளும் அவர்தான். ஒளியும் அவர்தான்... எல்லாமும் இறைவன்தான் என்கிறபோது எல்லாமும் ஒன்றே ஒன்றுதான். அதில் பேதங்கள் பார்ப்பதுதான் பேதமை. தோற்றங்களில் தான் வேறுபாடுகள் தெரிகின்றன. உண்மையில் அவை எல்லாமும் ஒன்றேதான். ஒன்றே பல உருவாய் மனிதனுக்குக் காட்சியளிப்பது இறைவனின் திருவிளையாடல். எண்ணற்ற காட்சிகளாய், அளவற்ற நிலைகளாய், எல்லையற்ற வகைகளாய் வரையற்றக் காலங்களாய் மானுடர்க்குப் புரிவதெல்லாம் இறைவனின் அளப்பரிய அருளோட்டத்தில் நாம் அவ்வப்போது கண்டு ரசிக்கிற, உணர்ந்து வியக்கிற ஒரு சில துளிகள்தாம். இறை அவதாரத்தில் வந்துபோகிற ஒருசில ஒளிச் சிதறல்கள்தாம். வேறுபாடுகள் தோற்றமே தவிர உண்மையல்ல. மனித உறவுகளிலும் அப்படித்தான். மனிதர்களுக்குள், உறவுகளுக்குள் வரும் வேறுபாடுகள் உண்மையல்ல. வெறும் தோற்றம்தான். அவற்றை உண்மையென்று நம்பி ஒருவருக்கொருவர் விலகிச் செல்லத் தேவையில்லை. மனித உறவுகளில், குடும்ப உறவுகளில் விரிசல்கள் கானல் நீர் போன்றவை.


ஸ்ரீ அருஞ்சுனை காத்த அய்யனார் துணை.

G.முத்துகனி நாடார், முத்துகனி பிரதர்ஸ் G.பால்ராஜ் நாடார் G.தங்கராஜ் நாடார்

**ஜோதி ஸ்வீட்ஸ் பேக்கரி** 9789427171 7397152711

**வளர்மதி பேன்சிஸ் ஸ்டோர்ஸ்**

கோல்டு கவரிங், பொம்மை, குழந்தைகள் விளையாட்டுப் பொருட்கள் இங்கு கிடைக்கும்.

**ஸ்ரீ பவானி அம்மன் பாத்திரக்கடை**

எங்களிடம்: பித்தளை, அலுமினியம் பாத்திரங்கள் கிடைக்கும்.

நெ.132, பஜார் வீதி, பெரியபாளையம், ஊத்துக்கோட்டை வட்டம், திருவள்ளூர்மாவட்டம்-601102.

விலைகுறைவு! R.Suresh Ph: 2226 6961, 22266962 மனநிறைவு!

**AMUTHA & CO**



Sony, L.G, TCL, SamSung, Onida,Sun sui, Akai, Philips, Panasonic, IFB, WhirlPool, Godrej, Kenstar,Kelvinator,Hitachi, Carrier, Voltas, Videocon, Electrolux, Tatasky, Big Tv, Aritel, Sun Direct, ULTRA, Sowbaghya, Amirtha, Akshaya, Lakshmi, Preethi, ButterFly, Usha, Khaitan, Crompton, Orient, Almonard, Havells

1, Venkatesan Street, Shanmugam Road, Tambaram West, Chennai-45.



## தோல்வியை ருசியுங்கள்! வெற்றியை ரசியுங்கள்!!

18.ஆச்சி மசாலாவின் தோற்றமும் வளர்ச்சியும்..!

உங்கள் கண்களில் எப்போதும் ஒரு தேடுதல் இருந்துகொண்டே இருக்கிறதே! இப்போது எதை தேடிக்கொண்டிருக்கிறீர்கள்?

"மண்ணுக்கு அடியில் இருந்து பொன்னும்- மரத்தின் உச்சியில் இருந்து கனியும் கிடைக்கிறது. ஆனால் முறையாக தேடினால் மண்ணில் இருந்தும் பெறலாம். மரத்தில் இருந்தும் பெறலாம். நான் அறிஞர்களின் புத்தகங்களில் இருந்து மட்டுமல்ல - அன்றாடங்காட்சிகளான நான் சந்திக்கும் மனிதர்களிடம் இருந்தும் எனக்கு தேவையான ஏதாவத ஒன்றை தேடிக்கற்றுக்கொள்வேன். எல்லோரிடமும் சிறந்த ஏதோ ஒன்று இருக்கும் என்ற உண்மையை நாம் புரிந்துகொள்ளவேண்டும். அதை தேடிப்பிடித்து கற்றுக்கொள்ளும் தன்மையையும், பொறுமையையும் நாம் வளர்த்துக்கொள்ளவேண்டும்.

உண்மையை சொல்கிறேன், தப்பாக புரிந்து கொள்ளாதீர்கள். நான் கோடீஸ்வரர்கள் மூலம் கற்றுக்கொண்டதைவிட, குப்பைத்தொட்டிகள் மூலம் கற்றுக்கொண்டது அதிகம்! மக்கள் பயன்படுத்தி விட்டுப்போட்டிருக்கும் உணவுப் பொருட்களின் கவர்கள் குப்பைத்தொட்டிகளில்தான் கிடக்கும். மக்கள் எப்படிப்பட்ட பொருட்களை பயன்படுத்துகிறார்கள் என்பதையும், அது எந்த அளவுக்கு விற்பனையாகிறது என்பதையும் குப்பைத் தொட்டிகள் மூலம் கண்டறிந்திருக்கிறேன். ஒரு தெருவில் இருக்கும் குப்பைத் தொட்டியை பார்த்தால், அந்த தெருவில் வசிக்கும் மக்களின் ஆரோக்கியத்தை அளவிட்டு விடுவேன். யாரையும் - எதையும், உயர்ந்தது- தாழ்ந்தது என்று தரம் பிரித்து ஒதுக்கி வைக்காமல், எல்லோரிடமும் நெருங்கிப் பழகி எதையாவது ஒன்றை நான் தேடிக்கொண்டே இருக்கிறேன். கற்றுக்கொண்டே இருக்கிறேன். ஏன் என்றால் இந்த உலகில் நானும் ஒரு சராசரி மனிதன் தான்.!"

- ஏ.டி.பத்மசிங் ஐசக்..

2011ம் ஆண்டின் சமூகரீதியான மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி,

## தொழில் மேதை.ஏ.டி.பத்மசிங் ஐசக் வெற்றிப் படிகள்



இந்தியாவில்... மொத்த மக்கள் தொகை 121 கோடி.

ஆண்களின் எண்ணிக்கை 62.31 கோடி.

பெண்களின் எண்ணிக்கை 58.74 கோடி.

இந்தியாவில் உள்ள மொத்த குடும்பங்களின் எண்ணிக்கை 24.39 கோடி.

நிலம் இல்லாத குடும்பங்களின் எண்ணிக்கை 9.85 கோடி.

மாதம் ரூ.5000க்கும் குறைவாகச் சம்பாதிக்கும் இந்திய குடும்பத்தினர் 75 சதவீதம்.

செல்போன் வைத்திருக்கும் இந்திய கிராமப்புறத்தினர் 68 சதவீதம்.

வருமான வரி கட்டும் இந்திய கிராமப்புறத்தினர் 5 சதவீதம்.

இது போன்ற கணக்கெடுப்பு 1991, 2001ம் ஆண்டுகளில் வெளியிடப்பட்டது. அவற்றை அடிப்படையாகக்கொண்டு எல்லா தரப்பு மக்களுக்கும் நிறைவான பலனைத்தரும் சிறந்த துறை, உணவுத் தயாரிப்பு துறைதான் என்பதை பத்மசிங் ஐசக் உணர்ந்தார். அதில் அதிகபட்சமாக அனைத்து மக்களையும் திருப்திப்படுத்தும் விதத்தில் முதன் முதலில் மசாலா தயாரிப்பில் இறங்கினார். 1995ம் ஆண்டில் இந்த துறையில் அடியெடுத்து வைத்தார்.



தனது பிராண்ட்டுக்கு அற்புதமான பெயர் சூட்ட அவர் ஆசைப்பட்டார். தனது மசாலா நாவிற்கு சுவை தருவதுபோல், நாவில் எளிதாக உச்சரிக்கும் பெயராகவும், மக்கள் மனதில் என்றும் நிலைத்திருக்கும் பெயராகவும், மாண்பு நிறைந்ததாகவும் அது அமைய வேண்டும் என்று விரும்பினார். நூற்றுக்கு மேற்பட்ட பெயர்களை அதற்காக பரிசீலனை செய்தார். நிறைவாக காப்பியத்தோடும், வரலாற்றோடும், மக்கள் வாழ்க்கையோடும் இரண்டறக் கலந்திருக்கும் ஆச்சி என்ற பெயரை தேர்வு செய்தார்.-

தொடரும்........




S.ATHISAYARAJ.B.A.,B.L.,P.G.DL.A
Correspondent
Koilpillai Mat.Hr.sec.School
65. Rayala Nagar, 2nd Main Road, Ramapuram, Chennai-89.
Ph:044-22492489. 22492286, Cell:9840715246.
Email:samuelathisayaraj@gmail.com

உங்கள் இல்லத்தில் உடனே திருமணம் நடைபெற வேண்டுமா?
Prop.K.A.Raman Nadar
Sri.R.M.T.திருமண தகவல் மையம்



கைராசியான ஸ்தாபனம் மற்றும் இந்து, R.C, C.S.I. நாடார் வரன்கள் அமைத்து தரப்படும். MD, MBBS, M.E, M.SC, M.C.A மற்றும் IAS, IPS, VIP வரன்களுக்கு மில் தொழில் அதிபர் வரன்களுக்கு அணுகவும்.
106, ஆற்காடு ரோடு, வடபழனி, சென்னை-26.போன்:45588957, செல்:9380791999, 9841329471. E-mail:ramannadar2004@yahoo.co.in Web:www.srirmt.com



தமிழர் மாண்பினையும் மாமன்னர் இராஜராஜ சோழரின் மாண்பினையும் ஒரு சேரப் பறைசாற்றி வரும் தஞ்சைப் பெரியகோயில் என்றழைக்கப்படும் தஞ்சைப் பெருவுடையார் கோயில் உலக பாரம்பரியத்துக்கு ஒரு எடுத்துக்காட்டாக திகழ்ந்து வருகிறது. 10ஆம் நூற்றாண்டில், முதலாம் இராஜராஜ சோழரால் கட்டுவிக்கப் பெற்ற இத்திருக்கோயிலின் கட்டடக்கலை காணத்திகட்டாதது! மலைகளே இல்லாத ஒரு ஊரில் மலைக்க வைக்கும் வகையில், 216அடி கோபுரத்துடன், 80டன் எடையுள்ள பிரம்ம மந்திரக்கல் என்ற கல்லினை உச்சியின் மேல் பதித்ததும் இமாலய சாதனையாகும்.

32ஆண்டுகளில் முழுக்க முழுக்க யானைகளின் உதவியோடு, ஆயிரக்கணக்கான மனிதர்களின் உழைப்பினைப் பெற்று எழுப்பப் பெற்ற இத்திருக்கோயில் இன்றளவும் புரியாத ஒரு புதிராக விளங்கி வருகிறது. - டாக்டர்.வி.ஜி.சந்தோசம் அவர்கள்..




எப்போதும் வென்றான் ஸ்ரீ சோலையப்ப சுவாமி துணை

**அடையார் ஆனந்த விநாயகர் காய்கனி & பழங்கள் அங்காடி**

(எங்களிடம் தரமான காய்கனி அனைத்தும் கிடைக்கும்)

**அடையார் முருகன் டிராவல்ஸ்**

நெ. 69/14, 2வது குறுக்கு தெரு, கஸ்தூரிபாய் நகர், அடையார், சென்னை-20 செல்: 9840038140, போன்: 24416633, 42116663,



உரிமையாளர்: த.பரமசிவன்

24 மணி நேர சேவை



உரிமை:T.DURAI, T.KUMAR. Cell:9444316813

**பேபி. புரோட்டீன்ஸ்**

**WHOLESALE & RETAIL**

2/37, 4th Lane, 1st Street Main Road, Shasthri Nagar, Adyar, Chennai-20. Ph:24465921. FREE HOME DELIVERY.




ஆர்.சித்தர்ராஜ் நாடார்

**குட்வில் ரியல் எஸ்டேட்**

136, ஆற்காடு ரோடு, வளசரவாக்கம்,
சென்னை-87. செல்:9444083769



T.Bernet Johnson M.E.,MBA., Managing Director. 72009 06699 / 90032 86677
7200506699.



**JEHOVAH**

GROUP OF COMPANIES



•Lab Ezuipments Manufacturing •Industrial Lunricant Distributor
•Automotive Lubricant Distributor •Industrial Equipments & Spares

E-jehovahjirehengineering@gmail.com / W: www.jehovahengg.com
No:60. 4th Main Road, L&T Colony, CRR Puram, Manapakkam, Chennai-125

வாழ்க வளமுடன்

C.மதியழகன்
செல்:9789095625. **ஸ்ரீ கணேஷ் பவன்** SGB



எண்:6, முத்துலிங்க ரெட்டி தெரு, (எம்.ஆர்.தியேட்டர் பில்டிங்) மேற்கு
தாம்பரம், சென்னை-45. போன்:M.சுரேஷ். செல்:9840945243.

எண்:1, வள்ளலார். தெரு, சேலையூர், கேம்ப்ரோடு, சென்னை-73.




SUGAM HOSPITALS
Symbol of Health
THIRUVOTTIYUR & CHROMPET
MULTI SPECIALITY HOSPITAL
* WORLD CLASS INTENSIVE CARE UNIT
* 24 HOURS TRAUMA AND EMERGENCY CARE
* HITECH OPERATION THEATRES
THIRUVOTTIYUR
40 50 60 70
#349, T.H.Road, Thiruvottiyur, Chennai -19.
CHROMPET
85 85 85 85 50
#107A, G.S.T. Road, Chrompet, Chennai -44
Dr.D.B.D.Sathiakumar M.D., Dr.Sheila Sathiakumar M.B.B.S., D.H.M
OUR GROUP DIAGNOSTIC CENTERS
HIBEAM SCANS
TOTAL IMAGING
ROYAPURAM 25 95 17 57 PONNERI 27 97 34 44


# 36-ஆம் ஆண்டு நினைவேந்தல்!

## அருமை அண்ணாச்சி வி.ஜி.பன்னீர்தாஸ் அவர்களது புகழ் ஓங்குக!



வி ஜி பி

எங்களது உள்ளம் நிறைந்தவரே!
எழிலார்ந்த திருமுகங் கொண்டோரே!
எங்கள் அருமை அண்ணாச்சி பன்னீரே!
தூண்டா விளக்காய் ஒளிர்ந்தவரே!
ஒளி தந்து எங்களை வழி நடத்தியவரே!

வணிகத்தின் அருமை உணர்த்தியவரே!
அதனைப் புதுக் கோணத்தில் எங்களுக்குக் கற்பித்தவரே!
தலைமையனாராய் நீரிருந்த போதிலும்
எமக்கெல்லாம் தந்தையாராயும் விளங்கியவரே!
குடும்பத்தினைக் கோயிலாக்கி
அக்கோயிலின் கோபுர தீபமாய் சுடர்விட்டீரே!

இல்லப் பயன்பாட்டுப் பொருள்கள் தம்மை
கட்டுப்படியாகும் விலையில் தவணை முறையில் வழங்கியவரே!
ஏழை, நடுத்தர மக்கள் வாழ்வினைச்
சிறக்கச் செய்தீரே! நல் வணிகத்திலும் கால் பதித்தவரே!
நிலையான மதிப்பினை நிறுவனத்திற்குத் தேடித்தந்தவரே!

எத்திசை நாங்கள் ஏகிடினும்
எங்களது நெஞ்சங்கள் உமது நினைவலைகளைச்
சுமந்து பெருமை கொள்ளும்!
வாழ்க எம்மான்!
ஓங்குக உமது புகழ் என்றென்றும்!

-வி.ஜி.சந்தோசம்

# விழித்தெழு!! இளைஞனே!!! விழித்தெழு....

வெற்றிக்கான பாதை - நேர்மை



நேர்மை என்பது காலத்தால் அழியாத ஒரு நல்லொழுக்கமாகும், இது வரலாறு முழுவதும் கலாச்சாரங்கள் மற்றும் நாகரீகங்கள் முழுவதும் போற்றப்படுகிறது. இது மனித உறவுகள், நம்பிக்கை, ஒருமைப்பாடு மற்றும் நம்பகத்தன்மை ஆகியவற்றின் மூலக்கல்லாகும். தனிப்பட்ட தொடர்புகள், தொழில்முறை முயற்சிகள் அல்லது சமூக கட்டமைப்புகளில் நேர்மையானது நமது செயல்களை வடிவமைக்கும் மற்றும் நமது விளைவுகளை பாதிக்கும் ஒரு வழிகாட்டும் கொள்கையாக செயல்படுகிறது. இந்த கட்டுரையில், நேர்மையின் முக்கியத்துவம், தனிநபர்கள் மற்றும் சமூகத்தில் அதன் தாக்கம் மற்றும் இன்றைய உலகில் அது ஏன் இன்றியமையாத மதிப்பாக உள்ளது என்பதை ஆராய்வோம்.

ஒருவரின் இலக்குகளை அடைவது, கனவுகளை நனவாக்குவது மற்றும் நிறைவான வாழ்க்கையை வாழ்வது ஆகியவற்றுடன் வெற்றி பெரும்பாலும் தொடர்புடையது. வெற்றிக்கு பங்களிக்கும் பல்வேறு காரணிகள் இருந்தாலும், நிலையான சாதனைகள் மற்றும் தனிப்பட்ட வளர்ச்சிக்கு வழி வகுக்கும் அடிப்படைக் கொள்கையாக நேர்மை தனித்து நிற்கிறது. இந்த கட்டுரையில், தனிப்பட்ட முயற்சிகளிலும் சமூகத்தின் பரந்த சூழலிலும் நேர்மை எவ்வாறு வெற்றிக்கான ஊக்கியாக செயல்படுகிறது என்பதை ஆராய்வோம்.

முதலாவதாக, நேர்மை நம்பிக்கையை வளர்க்கிறது. நம்பிக்கையே எந்த ஒரு வெற்றிகரமான உறவின் மூலக்கல்லாகும், அது தனிநபர்களுக்கிடையில், ஒரு குழுவிற்குள் அல்லது வணிக பரிவர்த்தனைகளில், நேர்மையாகவும், உண்மையாகவும் இருக்க உங்களை நம்பியிருக்க முடியும் என்பதை மக்கள் அறிந்தால், அவர்கள் உங்களுடன் ஒத்துழைக்கவும், உங்கள் முயற்சிகளை ஆதரிக்கவும், உங்கள் யோசனைகளில் முதலீடு செய்யவும் வாய்ப்புகள் அதிகம். நம்பிக்கையானது ஒரு நேர்மறையான சூழலை உருவாக்குகிறது, அங்கு தகவல் தொடர்பு சுதந்திரமாக பாய்கிறது, கருத்துக்கள் வெளிப்படையாகப் பகிரப்படுகின்றன, மேலும் முன்னேற்றம் கூட்டாக மேற்கொள்ளப்படுகிறது.

மேலும், நேர்மை நம்பகத்தன்மையையும் ஒருமைப்பாட்டையும் வளர்க்கிறது. நம்பகத்தன்மை என்பது தனக்கும் மற்றவர்களுக்கும் உண்மையாக இருப்பது, ஒருமைப்பாடு என்பது ஒருவரின் செயல்களை நெறிமுறைக் கொள்கைகள் மற்றும் மதிப்புகளுடன் சீரமைப்பதை உள்ளடக்கியது. உங்கள் தொடர்புகள் மற்றும் முடிவுகளில் நீங்கள் நேர்மையாக இருக்கும் போது, நீங்கள் நம்பத்தன்மையையும் ஒருமைப்பாட்டையும் நிரூபிக்கிறீர்கள், இது தனிப்பட்ட மற்றும் தொழில்முறை அமைப்புகளில் மிகவும் மதிப்புமிக்க பண்புகளாகும். இந்த குணங்களை வெளிப்படுத்துபவர்களிடம் மக்கள் ஈர்க்கப்படுகிறார்கள், ஏனெனில் அவர்கள் நம்பிக்கையையும் போற்றுதலையும் தூண்டுகிறார்கள்.

நேர்மை என்பது உண்மை மற்றும் நேர்மையைப் பற்றியது. சூழ்நிலைகளைப் பொருட்படுத்தாமல், நமது வார்த்தைகள், செயல்கள் மற்றும் நோக்கங்களில் உண்மையாக இருக்க வேண்டும். நேர்மையான நபர்கள் தனிப்பட்ட லாபத்திற்காக மற்றவர்களை ஏமாற்றவோ அல்லது கையாளவோ மாட்டார்கள், மாறாக, அவர்கள் தங்கள் தொடர்புகளில் வெளிப்படைத்தன்மை மற்றும் ஒருமைப்பாட்டை நிலை நிறுத்துகின்றனர். நாம் நேர்மையாக இருக்கும் போது, மற்றவர்களிடம் நம்பிக்கையை வளர்த்துக் கொள்கிறோம், ஏனென்றால் அவர்கள் உண்மையைப் பேசுவதற்கும் நேர்மையுடன் செயல்படுவதற்கும் நம் மீது நம்பிக்கை வைக்க முடியும் என்பதை அவர்கள் அறிவார்கள்.

தனிப்பட்ட உறவுகளில், நேர்மையானது வலுவான பிணைப்புகள் மற்றும் ஆழமான இணைப்புகளின் அடித்தளத்தை உருவாக்குகிறது. திறந்த மற்றும் நேர்மையான தொடர்பு தனிநபர்களிடையே புரிதல், பச்சாதாபம் மற்றும் மரியாதை ஆகியவற்றை வளர்க்கிறது. இது மக்கள் தங்கள் எண்ணங்கள், உணர்வுகள் மற்றும் கவலைகளை சுதந்திரமாக வெளிப்படுத்த அனுமதிக்கிறது, அவர்கள் கேட்கப்படுவார்கள் மற்றும் மதிக்கப்படுவார்கள் என்பதை அறிவார்கள். மேலும், நேர்மையானது சவால்களை எதிர்கொள்ளவும் மோதல்களை ஆக்கப்பூர்வமாக தீர்க்கவும் உதவுகிறது, ஆரோக்கியமான மற்றும் நிறைவான உறவுகளுக்கு வழிவகுக்கும்.

தொழில்முறை துறையில், நேர்மை சமமாக முக்கியமானது. முதலாளிகள் நேர்மையான ஊழியர்களை மதிக்கிறார்கள், அவர்கள் தங்கள் செயல்களின் உரிமையை எடுத்துக்கொள்கிறார்கள், தவறுகளை ஒப்புக்கொள்கிறார்கள், நேர்மையுடன் சிறந்து விளங்க முயற்சி செய்கிறார்கள். நேர்மையான பணியிடங்கள் நம்பிக்கை மற்றும் பொறுப்புக்கூறல் கலாச்சாரத்தை வளர்க்கின்றன, அங்கு பணியாளர்கள் பழிவாங்கும் பயம் இல்லாமல் தங்கள் கருத்துக்களையும் கவலைகளையும் தெரிவிக்க அதிகாரம் பெற்றுள்ளனர். மேலும், வாடிக்கையாளர்கள், முதலீட்டாளர்கள் மற்றும் பங்குதாரர்களின் பார்வையில் நம்பகத்தன்மை மற்றும் நற்பெயரைப் பேணுவதற்கு நேர்மையான வணிக நடைமுறைகள் அவசியம்.

ஒட்டுமொத்த சமூகமும் நேர்மையால் பயனடைகிறது. தனிநபர்களும் நிறுவனங்களும் வெளிப்படைத்தன்மை மற்றும் நேர்மையுடன் செயல்படும் போது, அது நம் வாழ்க்கையை நிர்வகிக்கும் அமைப்புகளில் பொது நம்பிக்கையையும், அதிகரிக்கிறது. மாறாக, நேர்மையின்மை நம்பிக்கையை சிதைக்கிறது, சமூக ஒற்றுமையை குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறது மற்றும் இழிந்த தன்மையை வளர்க்கிறது. எனவே, சமூகத்தின் அனைத்து அம்சங்களிலும் நேர்மை, நீதி மற்றும் நெறிமுறை நடத்தை ஆகியவற்றை மேம்படுத்துவதற்கு நேர்மையின் கலாச்சாரத்தை வளர்ப்பது அவசியம்.

ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட இன்றைய உலகில், தவறான தகவல்களும் வஞ்சகமும் பல்வேறு வழிகளில் வேகமாகப் பரவும் நிலையில், நேர்மையின் மதிப்பு முன்னேற்ற பாதையும் விட முக்கியமானது. இணையம் மற்றும் சமூக ஊடகங்கள் தகவல்களைப் பரப்பும் விதத்தை மாற்றியமைத்துள்ளன, மேலும் பொய்கள் மக்களை இழுத்து ஏமாற்றுவதை எளிதாக்குகின்றன. அத்தகைய நிலப்பரப்பில், நேர்மையான தகவல்தொடர்பு சத்தத்தின் மத்தியில் உண்மையின் கலங்கரை விளக்கமாக மாறும் நம்பகமான தகவல் ஆதாரங்களை நோக்கி தனிநபர்களை வழிநடத்துகிறது மற்றும் விமர்சன சிந்தனையை வளர்க்கிறது. மேலும், நேர்மை என்பது மற்றவர்களுக்கு உண்மையாக இருப்பது மட்டுமல்ல, தனக்கு உண்மையாக இருப்பதும் ஆகும். நம்பகத்தன்மை மற்றும் சுய விழிப்புணர்வு ஆகியவை நேர்மையின் இன்றியமையாத கூறுகளாகும், ஏனெனில் அவை தனிநபர்கள் தங்கள் மதிப்புகள், நம்பிக்கைகள் மற்றும் அபிலாஷைகளுடன் இணைந்து வாழ உதவுகின்றன. நாம் நமக்குள் நேர்மையாக இருக்கும்போது, நமது பலம் மற்றும் பலவீனங்களை அடையாளம் கண்டு, யதார்த்தமான இலக்குகளை அமைத்து, தனிப்பட்ட வளர்ச்சி மற்றும் நிறைவுக்கு

வழிவகுக்கும் தகவலறிந்து முடிவுகளை எடுக்க முடியும்.

முடிவில், நேர்மை என்பது சிறந்த கொள்கையாகும், அது தார்மீக ரீதியாக சரியானது என்பதால் மட்டுமல்ல, வாழ்க்கையின் அனைத்து அம்சங்களிலும் நம்பிக்கை, ஒருமைப்பாடு மற்றும் நம்பகத்தன்மை ஆகியவற்றின் அடித்தளமாகும். தனிப்பட்ட உறவுகள் முதல் தொழில் முறை முயற்சிகள் மற்றும் சமூக கட்டமைப்புகள் வரை, நேர்மையானது நமது தொடர்புகளை வடிவமைப்பதிலும், நமது விளைவுகளில் செல்வாக்கு செலுத்துவதிலும் முக்கிய பங்கு வகிக்கிறது. நேர்மையை வழிகாட்டும் கொள்கையாக ஏற்றுக்கொள்வதன் மூலம், நமக்காகவும் எதிர்கால சந்ததியினருக்காகவும் மிகவும் வெளிப்படையான, நெறிமுறை மற்றும் இணக்கமான உலகத்தை உருவாக்க முடியும். நேர்மை என்பது சிறந்த கொள்கை மட்டுமல்ல, ஒரு தனிநபரின் வெற்றிக்கான பாதையும் கூட. நம்பிக்கையை வளர்ப்பதன்மூலம், நம்பகத்தன்மையை வளர்ப்பதன் மூலம், பொறுப்புணர்வை ஊக்குவித்தல், நம்பக்த்தன்மையை வளர்ப்பது மற்றும் தனிப்பட்ட திருப்தியை மேம்படுத்துவதன் மூலம், நேர்மையானது நமது இலக்குகளை அடைவதற்கும் நமது கனவுகளை நனவாக்குவதற்கும் அடித்தளமாக அமைகிறது. வெற்றி என்பது செல்வம், அதிகாரம் மற்றும் புகழுடன் சமமாக இருக்கும் உலகில், உண்மையான வெற்றி என்பது நேர்மை மற்றும் நெறிமுறை நடத்தை ஆகியவற்றின் அடித்தளத்தில் கட்டமைக்கப்பட்டுள்ளது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

மேலும், நேர்மை மன அமைதி மற்றும் தனிப்பட்ட திருப்திக்கு வழிவகுக்கிறது. நேர்மையான வாழ்க்கையை வாழ்வது என்பது உங்கள் மதிப்புகள், நம்பிக்கைகள் மற்றும் அபிலாஷைகளுக்கு உண்மையாக இருப்பது உங்களுக்கும் மற்றவர்களுக்கும் நீங்கள் நேர்மையாக இருக்கும்போது, ஏமாற்றம் மற்றும் வஞ்சகத்தால் வரும் மன அழுத்தம் மற்றும் பதட்டத்தைத் தவிர்க்கிறீர்கள். அதற்கு பதிலாக, தெளிவு மற்றும் நம்பிக்கையுடன் உங்கள் இலக்குகளைத் தொடர்வதில் உங்கள் ஆற்றலைச் செலுத்தலாம். நேர்மை மற்றும் கடின உழைப்பின் மூலம் நீங்கள் வெற்றியை அடைந்துவிட்டீர்கள் என்பதை அறிந்துகொள்வது, எந்தவொரு குறுக்குவழி அல்லது நேர்மையற்ற ஆதாயத்தாலும் ஒப்பிட முடியாத நிறைவையும் மனநிறைவையும் தருகிறது.

நமது முயற்சிகளில் வெற்றி பெற பாடுபடும்போது, ஆபிரகாம் லிங்கனின் வார்த்தைகளை எப்போதும் நினைவில் கொள்வோம் "நான் வெற்றி பெறுவதற்குக் கட்டுப்படவில்லை, ஆனால் நான் உண்யையாக இருக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் வெற்றிபெறக் கட்டுப்படவில்லை, ஆனால் நான் வாழ்வதற்குக் கட்டுப்பட்டிருக்கிறேன். என்னிடம் என்ன ஒளி இருக்கிறது. இதை உணர்ந்தால் வாழ்க்கை உன்வசம். விழத்தெழு!! இளைஞனே........ விழித்தெழு...

**என்றும் கல்விப் பணியில் Dr.தே.தேவ்ஆனந்த்** MBA.,M.Com.,MHRM.,MSW.,M.L(Labour & Admn, Law), Ph.D.,
**செயலாளர், அன்னைவேளாங்கண்ணி கல்வி நிறுவனங்கள், சென்னை-15.**
**www.annaiveilankannis.com E-mail:devanand222@gmail.com Help line:9282144444. 044-43523712.**



Prop.S.Balakrishnan
**(FOR HIRE CENTRING SHEET, COLUMN BOX, SPAN, PROPS ETC.,)**
# SELVAM TRADERS
**New No : 7, Old No : 6, Medavakkam Main Road, Madippakkam, Chennai- 600 091**
**Ph: 9841193884, 044-22242096**



ஸ்ரீ முருகன் துணை
ஸ்ரீ ஐந்துவீட்டு சுவாமி துணை

செல்:94980 75679, 9445227158, 9677060358.

தூத்துக்குடி மாவட்டம், செட்டியாபத்து
வாக்கியம் பஞ்சாங்க கணிதர் ஜோதிடர்
K.M.துரைசாமி நாடார் மகன் ஜோதிடர்
C.T.சிவக்கொழுந்து வேல் மகள்

# ஸ்ரீ தேவி ஜோதிட நிலையம்

திருவல்லிக்கேணி, சென்னை-5, ஆன்லைன்-லில்
ஜாதகம் பார்க்கப்படும், வாட்சஆப்:94980 75679.

# நாடார் திருமணச் சடங்குகள்

--எஸ்.ஏ.இராம சந்திரடோகோ....

**மணவாழ்க்கையின் நோக்கம்:**

திருமாங்கல்யம் கட்டியபின் மணமக்கள் தமது தாம்பத்ய வாழ்வில் அன்பும் அறனும் திளைக்க இல்வாழ்க்கையின் பண்பும் பயனும் அதுவாகவே திகழ அத்தம்பதிகள் இனி இருவரல்ல ஒருவரே என்று கையடித்துக் கொடுப்பது போல நல்ல திடமனதுடன் கைப்பிடித்து கணவன் முன்னும் இல்லத்தரசி பின்னுமாக இணைந்து மனமொத்து வாழ்வதே "மணவாழ்ககை" ஆகும்.

மணம் செய்து, நல்ல மக்களைப் பெற்று வாழ்கின்ற வாழ்வே நிறைவான வாழ்க்கை. அல்லாத வாழ்க்கை அரை வாழ்க்கையே. அதனால் தான் வள்ளுவர் பெருந்தகை-

மங்கலம் என்ப மனைமாட்சி மற்றுஅதன்
நன்கலம் நன்மக்கட் பேறு

என்றுரைத்தார். "இல்லற மல்லது நல்லற மன்று" என்றுரைத்தார் ஔவையாரும். அவரே பிறிதோரிடத்தில் நாற்பொருளுக்குரிய (புருஷார்த்தங்கள்) விளக்கம் கூறுகின்ற வகையான் -

ஈதலறந் தீவினைவிட் டீட்டல் பொருளெஞ்ஞான்றும்
காதலிருவர் கருத்தொருமித் - தாதரவு
பட்டதே இன்பம் பரனை நினைந் தீம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு - என்று கூறுகிறார்.

எனவே இன்பம் தருவது இல்லற வாழ்க்கை என்பதும் இகத்தில் சிறந்ததிதுவே என்பதும், பேரின்பத்திற்கு வழிகாட்டி என்பதும் தெளிவாகிறது. அதனாலன்றோ அம்மையப்பராய் காட்சி தருகின்றார் அந்த அரனார்! தனது வாழ்க்கையின் அரைப் பாகத்தை அந்த அரிவைக்காகவே தந்து அர்த்த நாரீஸ்வரனாய் விளங்குகின்றாரன்றோ! இல்லற மல்லது நல்லது வேறென்றும் இல்லை என்று உணர்த்தவும், பெண்ணே பேரின்ப சாம்ராஜ்யத்தின் பிரதான வழிக்காட்டி என்பதை மானிடர் நேரில் காண்பதற்கும் இறைவனே இவ்வாறு கோலங்கொண்டுள்ளார்

வானுலக மோட்சமதை நாடி, வையகத்து இன்பங்களை வெறுத்து, தவக்கோலம் பூண்டு, இத்தாரணி தனிலுள்ள காடுமலைகளை தேடிச் சென்று காய்கனி கிழங்குகள் புசித்து கடுந்தவம் புரிதல் கடினமான பணி. இல்லறமே எளியது - அதுவே இனியது. இல்வாழ்வை மேற்கொண்டே பேரின்ப பதவி அடையலாம். இதனை மேற்கொண்டு பேரின்பத்தை பெற முன்படாதவன் துறவறத்தை மேற்கொண்டு என்ன செய்துவிடப் போகிறான். அது மிகவும் கடினமல்லவா? என்று கேட்கின்றார் பொய்யில் புலவர்

அறத்தாற்றின் இல்வாழ்க்கை யாற்றின் புறத்தாற்றிற் போஒய்ப் பெறுவது எவன்?- என்பது அவர்வாய் மொழி.

அறிவிற்சிறந்த அழகிய அன்பான மனைவி அமைந்து விட்டால் அதுவே வாழ்க்கையில் மகத்தான பேறு. சதா காலமும் அவளுடன் வாழ்தலே வானுலக இன்பம். அதனால்தான் ஔவையார் சொன்னார்-

"பர்த்தாவுக் கேற்ற பதிவிரதை யுண்டானால்
எக்காலுங் கூடி யிருக்கலாம்"

-என்று பேரும், புகழும், பெருமையும் அவளால் திட்டுவதுமட்டுமின்றி எதிரிகளும், இகழ்பவர்களும் வெட்கித் தலைகுனிவர்.

"புகழ்புரிந்த இல்லிலோர்க்கு இல்லை இகழ்வார் முன் ஏறுபோல் பீடு நடை" என்ற வள்ளுவர் வாய் மொழி இங்கு சிந்திக்கத்தக்கது.

"மாநில வாழ்வு பெறும் ஆனந்தம் வானுலகோர் அறியார்" என்பது ஒரு கவிஞரின் கூற்று. ஆம், இது முழுக்க முழுக்க உண்மையே. ஐம்புலன்களையும் தந்த இறைவன் அவைகள் அனுபவிக்கத் தக்க இன்பங்களனைத்தும் வைத்து அண்ட சராசரங்களையும் படைத்தான், கண்ணுக்கினிய காட்சி, காதுக்கினிய கீதம். நாவிற்கினிய சுவை நாசிக்கினிய வாசம், மேனிக்கிதமான மென்காற்று இவைகளையெல்லாம் ஐம்புலன்களால் அனுபவிக்கும் போது ஓர் அலாதி இன்பமே. உலகம் முழுமையும் இவ்வின்பங்கள் பரந்து கிடந்தாலும் இவைகளனைத்தும் ஒருசேர ஓரிடத்தில் அமைவது அரிது. ஆனால் பெண்டிரிடத்திலேதான் இவ்வின்பங்கள் யாவும் சேர உள்ளன. இதைத்தான் தெய்வப் புலவர் திருவள்ளுவர்"கண்டுகேட்டு உண்டுயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்

ஒண்டொடி கண்ணே உள" என்றுரைத்தார்.

ஆதலால் மணம் செய்து மகிழ்வுடன் வாழ்ந்து இல்லறத்துக்குரிய கடமைகளைச் செய்தலே நன்று என்றும், இல்லறம் மேற்கொண்டோரே முக்தி நெறிக்காக முயல்கின்ற அனைவரிலும் மேலானவர் என்றும் ஆன்றேரும் சான்றேரும் அழகாக கூறியுள்ளனர்.

**இல்லறத்தாரின் கடமைகள்:**

இல்லறத்தை மேற்கொண்டவர்கள் அறநெறிப்படி வாழ்க்கை நடத்தி, துறந்தவர்க்கும் வறியவர்க்கும், இவ்வுலக வாழ்வை முடித்தவர்க்கும் துணையாய் நிற்க வேண்டும். தன்னைப்போல் பிறரையும் பாவித்து அன்பொழுக பழகுதல் அவர்களின் கடனாகும். மறந்தும் மற்றவர்க்கு கேடு செய்யலாகாது. பிற உயிர்களை கொன்று உண்ணும் கொடிய பழக்கத்தை அறவே கைவிடுதல் வேண்டும். அறநெறியில் பொருளீட்டி, வறியவர்க்கு ஈந்து, விருந்தினரை உபசரித்து, சுற்றம் பேணி, குற்றம் நீக்கி வாழ்தல் இல்லற வாசிகளின் கடன்களாகும். கோபம், கடுஞ்சொல், பொறாமை, பேராசை, புறங்கூறுதல், ஆணவம் போன்ற அறத்திற்கு புறம்பான குணக்கேடுகளை அறவே விட்டொழிக்க வேண்டும்.

அறம், என்று சொல்லப்படும் மேலான ஒன்று யாதெனில் அதுதான் இல்வாழ்க்கை. ஆனால் அது மற்றவர் பழிக்கும் தன்மையில் இருக்கக் கூடாது. அதற்கேற்ற வகையில் வாழ்கின்ற இல்லறத்தார் தெய்வத்தோடு சரிசமமாக வைத்து போற்றப்படுவர்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்" என்று பொய்யா மொழியும் புகல்கின்றது.

இத்தனை பெருமைக்குரிய இல்லறத்தை மேற்கொண்டு புது வாழ்வில் அடியெடுத்து வைக்கின்றனர் புதுமணத் தம்பதிகள்.

எனவே திருமாங்கல்யம் பூட்டிய பின்னர் பல்வேறு பழக்க வழக்கங்களையும், சில சம்பிரதாயங்களையும் முன்வைத்து சிற்சில சடங்குகள் குடும்பத்திற்கு குடும்பம் சிறிது வேறுபாடான விதத்தில் நடத்தப்படுவதுண்டு ஆகையால் அவைகளை தனித்தனியே விவரிக்காது விடுவோம்.

திருமணம் முடிந்து மணமக்கள் மணப்பந்தலினின்றும் வீட்டுக்குள் வந்ததும் திருமணவாழ்த்துப் பாடும் ஒரு சம்பிரதாயம் பண்டை நாள் தொட்டு அண்மைக்காலம் வரை புராதன நாடார் குடும்பங்களில் அதற்கென ஏற்பட்ட வாழ்த்துப் பாடலைப் பாடி வாழ்த்துவதுண்டு.

அவ்வாறு வாழ்த்திப் பாடும் போது பெரும்பாலும் வலங்கை நூலில் காணப்படும் திருமண வாழ்த்துப் பாடல்களே இசைக்கப்படும். அந்நூல் சோழநாட்டில் புட்டாபுரத்தில் வாழ்ந்து பின்னர் எரானமான திரவியங்களுடன் திருவிதாங்கூரில் குடியேறியவரும், சான்றோர் குலத்தைச் சேர்ந்தவருமான வெங்கலராஜனின் குமாரத்திகளான செம்பம்மைகுட்டி, நீலம்மை குட்டி இருவரையும் திருவிதாங்கூர் மன்னன் மணக்க விரும்பி பலாத்காரத்தில் ஈடுபட்டபோது, வெங்கலராஜன் சாதிவிட்டு சாதியில் பெண் கொடுப்பதை சான்றோர் இனத்தார் ஏற்பதில்லை என திருவிதாங்கூரிலிருந்து தப்பி ஒடி கடல் மார்க்கமாக தென்பாண்டி நாட்டில் வந்து குடியேறிய விபரத்தையும், சான்றோர் இனப் பெண்களின் வீரதீரத்தையும் பாராட்டும் ஒரு நூலாகும். இக்காலத்தில் இது வில்லுப்பாட்டாக கோயில் திருவிழா மற்றும் விசேடங்களில் பாடப்பட்டு வருகிறது. - தொடரும்.

# நாடார்களில் நாடார் - திருமதி.கிருஷ்ணா ராதாகிருஷ்ணன்.

போன்:9597425424.

பெண்கள் நாட்டின் கண்கள் அப்பெண்களின் வாழ்வில் ஒளி ஏற்றுபவர் இவர் திருமதி.டாக்டர்கிருஷ்ணா ராதாகிருஷ்ணன்



ஒரு பெண் படித்தால் அந்த குடும்பமே முன்னேற்றமடையும் அது போலவே மகளிர் மேம்பட்டால் அந்த தேசமே மேம்படும் என்று குறிப்பிட்டார் பண்டிதர் ஜவஹர்லால் நேரு அவர்கள் இதன் கருப்பொருளை நன்றாக உணர்ந்து அதன்படியே மகளிர் மேம்பாட்டுக்காவும் தொழில் முனைவுக்காகவும் வழிகாட்டும் விடிவெள்ளி இவர்.

தூத்துக்குடி மாவட்டத்தில் ஆறுமுகநேரியில் திரு.மகாராஜா நாடார் திருமதி.மரகதம் அம்மாள் தம்பதிக்கு பிறந்த ஆறு பிள்ளைகளில் மூன்றாவது மகாராஜன் திருமதி மரகதம் தம்பதியினருக்கு பிறந்த ஆறு குழந்தைகளின் மூன்றாவது மகளாய் கிடைத்த முத்து இவர் எம்ஏ பட்டதாரி ஆன இவர் தனியார் கார்ப்பரேட் நிறுவனத்தில் உயர் அதிகாரியான திரு.ராதாகிருஷ்ணன் என்பவரை மணந்து இரு குழந்தைகளுக்கு தாயானவர். எப்பொழுதும் மகளிர் மேம்பாட்டிற்காக ஏதேனும் செய்ய வேண்டும் என்று எண்ணிய இவர் கணவரின் அலுவலகத்தின் மூலம் நடக்கும் மேம்பாட்டிற்காக இவர் செய்து வந்த தொடர் நிகழ்ச்சிகளின் பயனாக பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் மகளிர் மேம்பாட்டு பிரிவை தலைமை ஏற்று முன்னெடுத்துச் செல்லும் அழைப்பு இவருக்கு வந்தது. அந்த பொறுப்பை ஏற்று இவர் சிறப்பாக செயல்பட்ட பொழுது தான் மகளிர் மேம்பாட்டிற்காக மத்திய மாநில அரசுகள் அறிவிக்கும் நலத்திட்டங்களை பற்றிய விழிப்புணர்வும் அதன் பயனாளி ஆகும் வழிமுறைகளும் நகர்ப்புறங்களை தாண்டி பல பெண்களை சென்று அடையவில்லை எனவே மேலும் பல தரப்பட்ட பெண்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தவும் பயிற்சி அளிக்கவும் ஒரு முறையான அமைப்பை நிறுவ விரும்பி விமன் எண்டபிரனியஸ் வெல்ஃபேர் அசோசியேசன் தமிழ்நாடு தமிழ்நாடு மகளிர் தொழில் முனைவோர் நல சங்கத்தை 2008 ஆம் ஆண்டு சென்னையில் துவங்கினார். தொழில் துறையில் பெண்களின் பங்களிப்பு என்பது அவர்களது தனிப்பட்ட வருமானத்தையும் வாழ்க்கை தரத்தையும் உயர்த்துவதோடு மட்டும் இல்லாமல் நமது பொருளாதாரத்தையும் நாட்டின் பொருளாதாரத்தையும் நன்கு உயர்த்தும் என்பதை உணர்ந்த இவர் தனது அமைப்பின் மூலம் பற்பல வழிகாட்டுதல் நிகழ்ச்சிகளையும் பயிற்சிகளையும் நடத்தி வருகிறார் பொருளாதாரத்தில் பின்தங்கிய பெணகள் படிப்பில் பின்தங்கிய பெண்கள் கைம்பெண்கள் மாற்றுத்திறனாளிகள் மற்றும் திருநங்கைகள் ஆகியோர் நலனில் பெரிதும் அக்கறை கொண்ட இவர் விமன்ஸ் சேவா டிரஸ்ட் என்ற அமைப்பை தொடங்கி அதன் மூலமும் சேவையாற்றி வருகிறார் தானே ஒரு தொழில் முனைவோர் ஆனதால் அத்துறைக்கான தேவைகள் எவை திறன்கள் எவை என நன்கு அறிந்த அவர் பெண்கள் தொழில் தொடங்க ஏதுவாக பல வங்கிகளின் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் அதாவது இந்தியன் ஓவர்சீஸ் வங்கி இந்தியன் வங்கி தற்போது பாரத ஸ்டேட் வங்கியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து உள்ளார். அத்துடன் இதுவரை 40 வங்கி கடன் முகாம்களை நடத்தி உள்ளார்.

கிடைத்த பணத்தை வைத்து ஏதேனும் ஒரு தொழில் தொடங்கிட ஏதுவாக அதற்கான திறன் மேம்பாட்டு பயிற்சிகளை ஒருங்கிணைத்து இதுவரை 600 தொழில் திறன் மேம்பாட்டு பயிற்சி பட்டறைகளை இலவசமாக நடத்தியுள்ளார். தமிழகத்தின் ஏராளமான மாவட்டங்களில் இரு நாள் கருத்தரங்கம் மற்றும் ஏற்றுமதி இறக்குமதிக்கான கருத்தரங்குகளை தமிழகம் முழுவதும் நடத்தியுள்ளார் ஃபேபரிக் பெயிண்டிங் கைவினைப் பொருட்கள் மணப்பெண் அலங்காரம், பனைத் தொழிலுக்கான முக்கியத்துவம் உள்ள பயிற்சி பேக்கரி பயிற்சி, டிஜிட்டல் ஆன்லைன் மார்க்கெட்டிங் பயிற்சி, உணவுப் பாதுகாப்புத் துறை மூலமாக தரப்படும் சான்றிதலுக்கான பயிற்சி, ஏற்றுமதி இறக்குமதி கருத்தரங்குகளுக்கான பயிற்சி அமைத்தல், ஹெர்பல் பயிற்சி, நர்சரி அமைத்தல், மசாலா பொருட்கள் தயாரித்தல், கயிறு திரித்தல், காளான் வளர்ப்பு, கயிறு வாரியம் மூலமாக உதவித்தொகையுடன் கூடிய ஒரு மாத பயிற்சி, பேப்ரிகேஷன் பயிற்சி மேலும் மரபுசாரா பயிற்சியாக பெண்களுக்கு ஒரு மாதம் மத்திய அரசின் சிறு குறு நிறுவனங்களின் மூலம் ஒரு மாதத்திற்கான ஃபேப்ரிகேஷன் பயிற்சி



போன்றவற்றை வழங்கி 50 பெண்களுக்கு 25யூனிட் என பெல் நிறுவனத்தாரிடமிருந்து உரிமை வாங்கிக் கொடுத்துள்ளார். பெண்கள் மூலம் இயக்கப்படும் இந்த இருபத்தைந்து யூனிட்டுகள் அமைத்து தந்துள்ளார். பெண்களுக்கு இப்படி பேப்ரிக் பெயிண்டிங் முதல் பாப்ரிகேஷன் வரை அனைத்து துறைகளிலும் தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்தி மகளிர் வாழ்வாதாரத்தில் பொருளாதார மேம்பாட்டை மிகச் சிறப்பாக ஏற்படுத்தி உள்ளார் மேலும் மகளிர் தயாரித்த பொருட்களை சந்தைப்படுத்த மாதம் தோறும் பொருட்கள் கண்காட்சிகளும் விற்பனைக்கூடங்களையும் ஏற்படுத்திக் கொடுக்கும் இவர் நேரடி விற்பனையில் மட்டுமல்லாது இணையதளத்திலும் மகளிர் தயாரித்த பொருட்களை விற்பதில் பயிற்சி அளிப்பதன் மூலம் மகளிர் அடுத்த கட்டத்திற்கு மார்க்கெட்டிங் செய்வதற்கு அவர்கள் வளர்ச்சியை எடுத்துச் செல்கிறார். மேலும் மத்திய அரசின் ஜெம் போர்ட்டல் விற்பனை தளத்தின் மூலம் முதன்முதலாக தமிழ்நாட்டில் மகளிர்க்கென பயிற்சி அளித்த பதிவு செய்ய வைத்துள்ளார்.



கொரோனா காலத்தில் பலர் வேலை வாய்ப்புகளை இழந்த நிலையிலும் தொழில் முடக்கங்களை சந்தித்த நிலையிலும் இவர் அயராது உழைத்து இணைய வழி தேர்வுகளுக்கு ஏற்பாடு செய்து ஏறத்தாழ 1000 பேருக்கு வேலைவாய்ப்பு நிகழ்வு ஏற்படுத்தி கொடுத்ததுடன் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி மற்றும் இந்தியன் வங்கியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து அதன்மூலம் 200 பெண்களுக்கு கோவிட் காலத்திலேயே தொழில் தொடங்க உதவி செய்தார்.

சிட்பி வங்கி உதவியுடன் ஆண்டு முழுவதும் செயல்படும் தையல் பயிற்சி நிலையம் மூலம் பயிற்சி அளிப்பதுடன் கல்லூரி பெண்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி மற்றும் தொழில் முனைவோருக்கான ஒரு நாள் கருத்தரங்கு போன்றவைகளும் நடத்தியுள்ளார் மேலும் மாநில அளவிலான இருநாள் கருத்தரங்குகள் 32 நடத்தியுள்ளார். யாதும் ஊரே யாவரும் கேளிர் மனிதா மனிதம் போற்று என்பதற்கு ஏற்ப இவரது செயல்பாடுகள் விளங்கி வருகின்றது.



மகளிர் பொருளாதார மேம்பாடு மட்டுமின்றி மகளிர் ஆரோக்கியம் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக அதனை மேம்படுத்துவதற்காக 16 இலவச கண் மருத்துவ முகாம்களையும் 30 உடல்நல பரிசோதனை முகாம்களையும் புற்றுநோய் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் பரிசோதனைகளும் நடத்தியுள்ளார். வருடத்திற்கு இரண்டு முறை மூத்த குடி மக்களுக்கான சட்ட ஆலோசனை முகாம் மற்றும் கண் பரிசோதனை மருத்துவ பரிசோதனை ஆகியவை கட்டணம் இன்றி ஏற்பாடு செய்யப்பட்டு இவரால் நடத்தப்படுகிறது. இவ்வாறு பல்வேறு மகளிர் நலன்களை உருவாக்கித் தரும் இவர் இந்திய ரிசர்வ் வங்கியின் மகளிர் சங்கத்தின் சார்பாக கூட்டங்களில் பங்கு பெற்றுள்ளார் வணிகர் சங்க பேரமைப்பின் மாநில மகளிர் ஒருங்கிணைப்பாளராகவும், மாற்றுத்திறனாளிகள் சங்கத்தின் ஆலோசகராகவும் அகில இந்திய நாடார் சங்கத்தின் கௌரவ ஆலோசகராகவும் இவரது சங்கம் தமிழகத்தின் ஆதரவற்றோர் மற்றும் விதவைகள் நல வாரியத்தின் உறுப்பினராகவும் செயல்பட்டு வருகிறது.

பம்பரம் போல் சுழன்று மகளிர் மேம்பாட்டுக்காக தொடர்ந்து உழைத்து வரும் இவரது சேவையை பாராட்டி ரோட்டரி கிளப் அவார்டு, லயன்ஸ் கிளப் விருது, கிரவுண்ஜுவெல் விருது, வாழ்நாள் சாதனையாளர் விருது, மதுரை தமிழ் சங்கத்தின் விருது, மகளிர் மேம்பாட்டு திட்டத்தின் விருது, சூர்யா மருத்துவமனையின் விருது மேலும் 50க்கும் மேற்பட்ட விருதுகளை இவர் வாங்கியுள்ளார். இந்த சேவைகளுக்காக கௌரவ டாக்டர் பட்டமும் பெற்ற இவர் ஒவ்வொரு ஆண்டும் 5000 தொழில் முனைவோரை உருவாக்குவதே இவரது லட்சியம் எனக் கூறுகிறார் இவ்வாறு 17ஆண்டுகளாக செயல்பட்டு கொண்டு வரும் இவரது அமைப்பு 25,000 மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்டுள்ளார்கள். ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட பயிற்சி பெற்ற பெண்களை உருவாக்கி உள்ளார். மாவட்ட மாநில அளவிலான கருத்தரங்குகள் வங்கி கடன் முகாம்கள் வேலை வாய்ப்பு முகாம்கள் தயாரிப்பு முதல் விற்பனை வரை முதலீடு முதல் மார்க்கெட்டிங் வரை அனைத்து வகையிலும் சிறந்த கைக்கோளாய் அமைந்து இதுவரை ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட நேரடி பயனாளிகளின் வாழ்வில் ஒளி ஏற்றியவர் தான் மகளிர் மேம்பாட்டு போராளி திருமதி கிருஷ்ணா ராதாகிருஷ்ணன் அவர்கள்

அன்பை விதைத்து சரி பாதை செய்வோம்
சக மனிதரை மதித்து மரியாதை செய்வோம்

என்பதற்கு ஏற்ப மகளிர் பொருளாதார மேம்பாட்டை மகளிரை ஒருங்கிணைத்து அன்புடன் வழிநடத்திக் கொண்டிருக்கிறார்கள். இவரது முயற்சிகள் அனைத்தும் வெற்றி பெற வாழ்த்துகிறோம்.


INVEST IN A
DOUBLE RENT
READY TO MOVE IN HOMES!
RUBY
Landmark
On Vandalur-Padappai Main Road
Mannivakkam
₹49 lacs Onwards
2 & 3 BHK
Luxury Apartments
1101 - 1518 sq.ft.
RUBY
ELITE
READY TO MOVE IN
₹91 lacs Onwards
46 Lacs
42.7 Lacs
REGENCY
RUBY
Gateway
STAR CITY
UNDER CONSTRUCTION
ruby
3009 3009
www.rubybuilders.in
FOR UNBELIEVABLE OFFERS VISIT / CALL
ruby 3009 3009


GP
கோபால் பிளாஸ்டிக்
Dealers in : எல்லாவகையான பிளாஸ்டிக் மெட்டீரியல் கிடைக்கும்
9, அரங்கப்பன்தெரு, (ஸ்ரீனிவாஸ்தியேட்டர்அருகில்), மேற்கு மாம்பலம்,சென்னை-33
RS பிளாஸ்டிக்
உரிமையாளர்:S.ராஜகோபால், S.ஜெயராஜ்
நெ.16, உய்யாலிஅம்மன்கோயில்தெரு,திருநீர்மலை,சென்னை-44.
Cell:9444037465, 9840446688 Ph: 24891192. 24748148.
S.இராஜகோபால்
S.ஜெயராஜ்


நல்லதே நினைப்போம்! நல்லதே செய்வோம்! நல்லதே நடக்கும்!
நியூ நிதில் & கோ
தரமான கட்டில், பீரோ, மெத்தை, இதர பர்னிச்சர்கள் வாங்க சிறந்த இடம்..
போன்:044-25962323, 044-42165485
NEW NITHIL & CO
Whole Sale & Retail
Steel & Wood Furniture Show Room
No:1171, T.H.Road, Old Washermanpet, Chennai-600 021

## தமிழக நாடார் மேட்ரிமொனி

SINCE 2007

சென்னை, தமிழகமெங்கும் மற்றும் வெளிநாடு வரன்கள்

தாங்களின் வீட்டிலுள்ள வரன்களுக்கு மணமகன், மணமகள் விபரங்கள், ஜாதகத்துடன் தாங்கள் வீட்டிலிருந்து எங்களின் வெப்சைட் மூலமாக நேரில் பார்க்கலாம். **வரன் பதிவு இலவசம்.**

Visit Our Website

**www.tamilaganadarmatrimony.com**

நம்ம தமிழகத்தின் சென்னை, நெல்லை, தூத்துக்குடி, குமரி, விருதுநகர் உட்பட அனைத்து மாவட்டம். இந்தியாவின் சென்னை, மும்பை, கர்நாடகா, ஆந்திரா மற்றும் அனைத்து மாநில நாடார்கள்.
USA, UK, Canada, Singapore, Malaysia, Australia, Germany, Dubai போன்ற வெளிநாடுகளிலுள்ள இந்து நாடார், கிறிஸ்தவ நாடார் (RC, CSI, Pentecost) BE, ME, M.Tech, MCA, MBA, IT, CA, Govt, VIP தொழில் அதிபர்கள் சிறிய, பெரிய வியாபாரிகள் முதல் மணம் / மறுமணம், 17 வருட அனுபவமுள்ள நாங்கள், எங்களிடம் ஏராளமான திருமணங்கள் நடைபெற்று வருகிறது.

## தமிழக டாக்டர்ஸ் மேட்ரிமொனி

MBBS, MD, MS, DGO, MDS, ORTHO, ANESTHESIA, SIDDHA, HOMEO, NURSE

**Open our Website : www.tamilagadoctorsmatrimony.com**

எங்களுக்கென்று தனி வெப்சைட் இருப்பதால் எங்களிடம் மிக சுலபமாக திருமணம் முடிகிறது.
திருமணத்திற்காக காத்திருக்காதீர்கள். உங்கள் வரன்களுக்காக பேசும்

# நெல்லை T. ராஜன் நாடார்

கேம்ப்ரோடு ஜங்சன், கிழக்கு தாம்பரம், சென்னை - 600 073

**Cell : 73388 12126, 73977 76595**

E-mail : tamilagamatrimony2005@gmail.com

# என் தந்தையின் அறிவுச் சிந்தனைகள்!

## 6.சிக்கனம் ஒரு தொழில் ரகசியம்

**விஜிபி ராஜாதாஸ்**

என் தந்தையார் அடிக்கடி சொல்வார்:

1.ஆற்றில் போட்டாலும் அளந்து போடு.

2.ஓட்டைப் பானையில் தண்ணீர் நிற்காது.

ஒரு தொழிலை நடத்திக் கொண்டிருக்கும் போது, நஷ்டம் ஏற்பட்டால், அந்த நஷ்டத்தை அடைக்கும் வரை, நாம் என்னென்ன வழிகளில் எல்லாம் செலவினங்களை குறைக்க முடியுமோ அந்தந்த வழிகளில் செலவினங்களைக் குறைக்க வேண்டும். மேலும், எந்தெந்த வழிகளில் வருமானத்தைப் பெருக்க முடியுமோ அந்தந்தவழிகளில் வருமானத்தைப் பெருக்கவேண்டும். எப்படியாவது நஷ்டம் என்ற ஓட்டையை அடைக்க வேண்டும். அவ்வாறு நாம் செய்யாவிட்டால், நாம் எவ்வளவுதான் தொழிலில் முதலீடு செய்தாலும், அது கரைந்து கொண்டே போகும் என்பதே உண்மை.



இது விஷயத்தில் என் தந்தையார் எப்போதும் எச்சரிக்கையாக இருப்பார். உதாரணத்துக்கு ஒன்று சொல்ல விரும்புகின்றேன்.

அதாவது, ஒரு பானையில் ஓட்டை இருக்கும் பட்சத்தில், அது சிறிய ஓட்டையாக இருந்தாலும் சரி, அந்தப் பானைக்குள் எவ்வளவுதான் தண்ணீர் நிரப்பினாலும், அந்த ஓட்டையின் வழியாக, தண்ணீர் கசிந்து கொண்டே இருக்கும். அந்த பானைக்குள் தண்ணீர் முழுவதுமாக நிரம்புவதற்கு வாய்ப்பே இல்லை. கடல் அளவு தண்ணீர் நிரப்பினாலும், அந்தக் கடல் நீர் ஓட்டைப் பானையிலிருந்து வெளியேறிவிடும். இதை உணர்த்தும் விதமாக எங்கள் தந்தையார் எடுத்த நடவடிக்கை ஒன்றை இங்கே குறிப்பிடவிரும்புகின்றேன்.

அந்தமான் தீவில், ஒரு சிறிய கடையாக விஜிபி விற்பனைக்காட்சி அறை அமைத்து நடத்தி வந்தோம்.அங்குள்ள மக்களுக்கு “ஸ்மீத்மிக்ஸி” - சென்னையில் மொத்த விலைக்கு வாங்கி, அதை கப்பல் மூலமாக அந்தமானுக்கு அனுப்பி வியாபாரம் நடத்திவந்தோம் ஆரம்ப காலத்தில் விற்பனை நன்றாக இருந்தது. அந்த தீவு சிறிய ஜனத்தொகை கொண்டதால், ஸ்மீத்மிக்ஸி அதிகமாக விற்பனையாகவில்லை, எப்படி முயன்றும் விற்பனையை அதிகரிக்க முடியவில்லை. ஆனால், வருடாவருடம், எங்களுடைய சென்னை அந்தமான் போக்குவரத்து செலவுகள், காட்சி அறை, கடையின் வாடகை மற்றும் இதர செலவுகள் அதிகமாகிக் கொண்டே வந்தது. “ஸ்மீத்மிக்ஸி”-யில் கிடைக்கும் லாபத்தைவிட, எங்களுடைய முதலீட்டுத் தொகை, அதிகமாகிக் கொண்டே இருந்ததால், மாதா மாதம் ஸ்மீத்மிக்ஸி விற்பனை நஷ்டத்தில் போய்க்கொண்டே இருந்தது. இந்நிலையில் எங்களுடைய செலவுகளைக் குறைக்கவும் வழியில்லாமல் போய்விட்டது.

இந்தச் சூழ்நிலையில், வேறு வழியில்லாமல் அந்தமான் கடையை மூடிவிடுவதென்று என் தந்தையார் முடிவெடுத்து, சரியான நேரத்தில் கடையை இயக்குவதை நிறுத்திவிட்டார்கள்.

என் தந்தையார் அவ்வாறு செய்தது சரியா? தவறா? என்ற என் உள்ளத்தில் கேள்விகள் எழுந்து கொண்டே இருந்தது, ஏனென்றால், அந்தமான் தீவு ஒரு சிறந்த சுற்றுலா ஸ்தலம். இந்தியா மற்றும் உலக நாடுகளிலிருந்து சுற்றுலா பயணிகள் வந்து போகின்ற ஒரு சிறப்புமிக்க இடம் அந்தமான். அங்கு நமது விஜிபி கம்பனியின் கிளை இருப்பது ஒரு பெருமைக்குரிய விஷயம். ஆனால், என் தந்தையார் அவர்கள் எல்லாவற்றையும் மனதில் வைத்து, ஒரு கடினமான முடிவை எடுத்தது அந்த நேரத்தில் எனக்குப் புரியாமல் இருந்தது. ஆனால், தொழில் ரீதியாக பின்பு எனக்கு ஏற்பட்ட அனுபவத்தால் என் தந்தையின் முடிவு சரியானதே என்று உணர்ந்து கொண்டேன்.

ஆக, எந்தவொரு தொழிலோ, வியாபாரமோ, என்றால், அந்த தொழில்களில் நஷ்டம் ஏற்பட்டால், அதை நன்கு ஆராய்ந்து, எதனால் நஷ்டம் ஏற்படுகிறது என்பதைக் கண்டு, எவ்வழி கையாண்டால் மேற்கொண்டு நஷ்டம் ஆகாமல் நடத்துவதற்கு எல்லா முயற்சிகளையும் எடுக்க வேண்டும். அவ்வாறு எடுத்தாலும், அந்தத் தொழில் தொடர்ந்து நஷ்டம் ஏற்படாமல் நடத்துவதற்கு வழியில்லை என்றால், அந்தத் தொழிலை மேற்கொண்டு நடத்தாமல் விட்டுவிடுவது நல்லது. அதாவது, கடமையை அலுவலகத்தை மூடிவிடுவது நம்மைக் காப்பாற்றும் ஒரு வழி என்பதே ஆகும்.

-தொடரும்.....



N.R.N.Group

போன்:044-26790587

**பிரியா டிப்போ**

கீத்து, மூங்கில், சவுக்கு, கட்டை, கரி, கல்போஸ்ட், தார்சீட், செங்கல், மணல், ஜல்லி, சிமெண்ட் கிடைக்கும்.

2/166, மவுண்ட் பூந்தமல்லி டிரங்க் ரோடு, எம்.எஸ்.எஸ்.நகர், காட்டுப்பாக்கம், சென்னை-56.





Prop.S.Vijayan, Cell: 98403 53031. (0)044/ 26623031.

**SRI LAKSHMI ENTERPRISES**

Scaffollding & Shed contractor / School, College, Church & Construction Company / All Type Shed Works

28/54, Cooks Road, P.B. Chennai, Chennai-12.

சேர்ந்து பயனடைவீர் ! வாய்ப்பை பயன்படுத்துவீர் !!

**இக்கல்வி ஆண்டிலேயே மருத்துவ படிப்பு பயில மிக குறைந்த இடங்களே உள்ளன.**

Counselling Apply செய்யாத மாணவர்களுக்கும் அரிய வாய்ப்பு

**அத்தி இயற்கை மருத்துவ கல்லூரி** குடியாத்தம் [வேலூர் மாவட்டம்]

(இயற்கை மருத்துவம் & யோகா)

அரசு அங்கீகாரம் பெற்றது. நீட் தேர்வு விலக்கு பெற்றது.

**BNYS (5½ வருடம்) (NATUROPATHY & YOGA)** **COUNSELLING CODE: 852**

**04171-229108, 8754959066**




வேலூர் மாவட்டம் குடியாத்தம் நகரின் அருகில் 4கிலோமீட்டர் தொலைவில் காக்கா தோப்பு கிராமத்தில் எங்களுடைய அத்தி இயற்கை மற்றும் யோகா மருத்துவ கல்லூரி அமைந்துள்ளது.

எங்களுடைய கல்லூரியானது இயற்கை சூழலில் தேசிய நெடுஞ்சாலை, இரயில் நிலையம் மற்றும் நகர பேருந்து நிலையத்திற்கு அருகாமையில் அமைந்துள்ளது.

கிராமப்புற மாணவர்களையும் மருத்துவராக்க வேண்டும் என்ற நோக்கில் பேராசிரியர் சிறுநீரகவியல் நிபுணர் டாக்டர் பி.சௌந்தரராஜன் அவர்களால் துவங்கப்பட்ட கல்லூரி.

எங்களுடைய கல்லூரியில் இயற்கை சூழலுடன் கூடிய காற்றோட்டமான வகுப்பறைகளும், மாணவ, மாணவிகளுக்கு தங்கும் விடுதிகளும் மற்றும் அனைத்து நோய்களுக்கும் சிறந்த முறையில் அத்தி இயற்கை மற்றும் யோகா மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி நிலையம், அத்தி அலோபதி மருத்துவமனை மற்றும் ஆயூஷ் மருத்துவமனையில் நோயின் தன்மை அறிந்து கூட்டு மருத்துவமனையில் நோயின் தன்மை அறிந்து கூட்டு மருத்துவ சிகிச்சை முறையை பயன்படுத்தி நோயாளிகளுக்கு எந்தவித பக்க விளைவுகளும் ஏற்படா வண்ணம் சிறந்த முறையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

எங்களுடைய மாணவர்களுக்கு இயற்கை மருத்துவம் மட்டும் இல்லாமல் அலோபதி ஆயுஷ் போன்ற மருத்துவத்தை பற்றியும் அறிய முடிகிறது.. எனவே நோயின் தன்மை அறிந்து அதற்கேற்ப கூட்டு சிகிச்சை முறை பயன்படுத்தி சிறந்த முறையில் சிகிச்சை அளிக்க கூடிய வகையில் எங்களுடைய கல்லூரி வளாகத்திலேயே பயில வழிவகை செய்யப்பட்டுள்ளது.

"அண்ணீ... உங்கள் மனம் மாறவே மாறாதா?"

"மாறாது! எப்படி மாறும்? மாறினால் உன் சகோதரன் விட்ட சவாலில் நான் தோற்றல்லவா போவேன்?

"வாழ்க்கையை பந்தயமாக்காதே சாவித்திரி" அண்ணன்.

" என்னை மன்னித்துவிடண்ணா! உன் பேச்சை நான் தட்டமாட்டேன். ஆனால் இந்தப் போராட்டத்தில் வாழ்க்கைதான் என் பந்தயப்பொருள்! அதில் யார் உதவியையும் நான் ஏற்பதாயில்லை."

அனிதா அப்படியே ஒதுங்கி நின்று தலை கவிழ்ந்தாள்.

"அவளைப் பார்! உன்னைத் தேடி எங்கள் எல்லோரையும் விட அதிக கவலையுடன் ஓடோடி வந்தாளே.. தலை எழுத்தா அவளுக்கு? அப்பா.

"அனிதா.." சாவித்திரி அவளருகே சென்றாள்.

திரும்பி நின்று தலை கவிழ்ந்து.. கால் பெருவிரலால் நிலத்தைக் கீறினாள் அனிதா. கண்கள் நீர் வர்ஷினியாய் மாறின.

"என்னைப் புரிந்து கொள் அனிதா..."

"என்மீதும், சுஜாதா மீதும் உங்களுக்கு பாசமோ அன்போ கிடையாதா அண்ணீ? கிடையாது என்று சொல்லி விடுங்கள்.... நாங்கள் போய்விடுகிறோம்".

"உண்டு.! நிறைய உண்டு! அதைக்காட்ட எனக்கு காலம் வரும்..."

இப்போது...?

நீ உன் அப்பாவோடு புறப்படு..."

"மாட்டேன்...!"

"அண்ணி...! உங்களுக்கு எடுபிடிவேலை செய்து கொண்டு உங்களுக்கு வேலைக்காரியாய் நான் இங்கே இருக்கப் போகிறேன்.

"சாவித்திரி, அந்த பெண் அன்பை நீ அங்கீகரித்தால்தான் என் பெண்ணாய் நீ இன்னும் இருக்கிறாய் என்று நான் நம்புவேன்..." அப்பா.

"அப்பா ... நீங்கள் என்னை உங்கள் பெண்ணாய் மட்டும் ஏன் நினைக்கிறீர்கள்? இந்த மண்ணில் எத்தனை பெண்கள் இப்படி ஒரு நிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்களோ... அவர்களுக்கெல்லாம் அப்பாவாக நின்று ஏன் பார்க்க மறுக்கிறீர்கள். அம்மா இல்லாத குறையே தெரியாமல் என்னை வளர்த்த நீங்கள் சொல்வதை நான் தட்டுவதற்கு நீங்களே காரணமாயிருக்கலாமா அப்பா?.

..............." "நான் தொடங்கியிருப்பது சத்திய யாத்திரை. இந்த சத்திய யாத்திரைக்கு துணை கொதிப்பும், கொந்தளிப்பும் தான்! பக்க பலமோ... ஆறுதலோ என்னை அழுத்தி... அதலபாதாளத்திற்கே கூட கொண்டு போகலாம் என்று நான் பயப்படுகிறேன்...."

"....." பாரதி சொன்னதைப்போல் எல்லாவற்றையும் விட்டு விடுதலையாகத் துடிக்கும் என் சிறகுக்கு கல்லைக்கட்டி சிறகடிக்க இயலாமல் பண்ணாதீர்கள்.

நீ பேசுவது உனக்கு மட்டுமே நியாயம் உனக்கு மட்டுமே புரியும். எங்களுக்கு புரியாத புதிர்..

"என்னைப் புரிந்தும் புரியாமல் நடிக்கிறீர்கள் அப்பா.

"இல்லை. சத்தியமாய் இல்லை! உன்னைச் சுற்றிவரும் உதவியை நீ ஒதுக்கிவிடு! அதற்காக உன்னை மனதால் புரிந்து, உன்மனம் என்பது கோபுரம் என கருதி.. அந்த கோபுர மாடத்தில் குடியிருக்கத் துடிக்கும் இந்தப் பெண்ணிற்குக் கூட மனம் இரங்காமல் நீ கல்லாகிப்போய் எதில் போராடி,எதில் வென்றால்தான் யாருக்கும் என்ன லாபம்? அட உனக்கே அது என்ன திருப்தியைத் தரும்?"

"அப்பா...?!"

"வழக்குரைத்த கண்ணகி, தனக்குள் கொழுந்துவிட்டு எரிந்த நெருப்பை அணைக்காமல் மதுரையையே எரித்தாளே... அவள் மனம் அதற்கு பிறகாவது திருப்திப்பட்டதா?...

அமைதியடைந்ததா..? இல்லை சாவித்திரி... இல்லை அந்த கற்புக்கனலி கடைசியில் அழுதாள் விம்மி விம்மி,.. குலுங்கிக் குலுங்கித்தான் அழுதாள்! அதுவா வெற்றி...? அதுவா லட்சியம்? யோசித்துக் கொள் நானும் உன் அண்ணனும் புறப்படுகிறோம்! நீ என் பெண். உனக்கு இந்த நேரத்தில் நான் விட்டுப்போவது தைரியம்.. மன உறுதி என்ற உன் மனக்காவலகளே... அனிதா.. நீ கூட புறப்படுகிறாயா?

இல்லை மாமா ! நீங்கள் போங்கள்!

இல்லை அனிதா! நீயும் புறப்படு. அனிதாவின் அப்பா.

"அப்பா...?

"ஆமாம் அனிதா! அவள் உன் அண்ணனக்காக மட்டும் உங்களிடம் பழகியவள். பாசம் வைத்தவள். அவனே கேவலமாய் போனதற்குப்பின் நாம் அவளை எந்த உறவில் நட்பில் தொடர முடியும்? அப்படித்தான் அவள் நினைக்கிறாள். அதுதானேயம்மா நியாயம்?"

"அப்பா...! அண்ணியை நான் என் உடன் பிறந்தவன் மனைவியாய் நம்பி வரவில்லை! என் அம்மாவாய், அக்காவாய்... வயதில் மூத்த சகோதரியாய்... என் ஆசிரியையாய் நினைத்தே வந்தேன். என்னை அவர்கள் ஏற்றுக் கொள்வார்கள்! அதுவரை நான் அவர்களின் வீட்டிற்குமுன்... பூட்டிய கதவை பார்த்துக்கொண்டே கூட காத்திருப்பேன்!"

"அனிதா...!"தாங்க முடியாத உணர்ச்சி மிகுதியுடன் அனிதாவைக் கட்டிக் கொண்டாள் சாவித்திரி.

அண்ணீ...!"

"நீ போக வேண்டாம்! என்னோடு இரு! ஆனால் ஒரு நிபந்தனை...."

"என்ன அண்ணீ?"

நீ இங்கிருப்பதைச் சாக்காக வைத்துக்கொண்டு உங்கள் வீட்டிலிருந்து ஒரு சல்லிக்காசு கூட இங்கே வரக்கூடாது!

வராது!"

"அம்மா..."மாமா...

"உங்கள் சொத்துக்களோ....பணமோ என் பெயரிலோ... என்னை தேடியோ வந்தால் மறுநிமிடமே இவள் மீது நான் வைத்திருக்குப் பிரியமோ.... உங்களை என் தகப்பனாய் நான் இபொழுதும் மதிக்கிறேனே அதுவோ சுத்தமாய் இல்லாமல் போய்விடும்!

இல்லை மகளே... இல்லை! உனக்கு என் சொத்து எதையும் தந்து உன்னை கொச்சைப்படுத்தமாட்டேன்! போதுமா?"

"போதும்" "சாவித்திரி" "என்ன மாமா?" நானோ, உன்

அத்தையோ, சுஜாதாவோ, எங்கள் பெண் நீ என்ற பாசத்தோடு உன்னைப் பார்க்கவர அனுமதிப்பாயா?"

"நிச்சயம்!" "இது போதும் மகளே...! இப்போதும்!" கடைக்கண்களில் ஆனந்த பாஷ்யம் வழிந்தோட கரம் குவித்தார் மாமா.

அன்று காலையிலேயே அப்பா, அண்ணன், மாமா மூவரும் ஊருக்கு கிளம்பி விட்டார்."அம்மா சாவித்திரி ... நிச்சயம் நீ உன் லட்சியப்படி உன்னை நிர்க்கதியாய் விட்டுவிட்டு, எவனோ ஒருவனுக்கு கிரயப் பட்டா கூடப் போட்டுக்கொடுத்து விட்டுப்போன கிராதகன் இருக்கும் இதே மண்ணில் உன் தனித்துவத்தால், திறமையால் கவுரவமாய் வாழ்ந்துதான் காட்டப்போகிறாய்! அப்படி வாழ்ந்து உன்னை ஜெயிப்பேன் என்றவன் உன் ஜெயத்தைக் கண்டு தலைகுனியும் காலம்வந்தபின் உன் பிறந்தவீடு, தகப்பன், தமையன், என்று எங்களைத் தேடி வருவாயம்மா?" குரல் தழுதழுக்க கேட்டார் அப்பா.

"நிச்சயம் அப்பா.. அப்பா, என்னை நீங்கள் கட்டாயப்படுத்தி, கர்நாடகமாக்கி, கட்டுப்பட்டு இருந்தால்தானயிற்று, எங்களோடு வந்தால்தானாயிற்று... நான்கு சுவர்களுக்குள் அடைப்பட்டுக்கிடந்து, அழுதழுது புழுங்கிச் செத்தால்தானாயிற்று என நிர்ப்பந்திக்காமல் விட்டதே எனக்கு பெரிய சிலாக்கியம்! என்றைக்கிருந்தாலும் நான் உங்கள் பெண்தான்! என் அண்ணனின் தங்கைதான்! எனக்கு இனி ஒரு நிழல் தேவை என்றால் அது நம் வீட்டு நிழலாக மட்டுந்தானேயப்பா இருக்க முடியும்? நிழலுக்கு நான் ஒதுங்க நினைத்தால் ஓடோடி வந்துவிடுவேனப்பா. ஆனால் ஒன்று..

என்னம்மா?

"உங்கள் பெண் இந்த பிறவியில் இனியும் நிழல்தேடி வரக்கூடாது. நிழல் கொடுக்கும் விருட்சமாய்த்தானாக வேண்டும் என்ற சுவாமியிடம் தினம்தினம் பிரார்த்தனை செய்வீர்களா அப்பா...?

"மகளே...! என் தாயே... சாவித்திரி.. இருதயம் துடித்துக் கரைந்தது. மகளை ஆதரவாகத் தழுவி நெற்றியில் முத்தமிட்டார். நீர் மணிகள் அவள் தலையில் பட்டு மயிர்களுக்குள் மறைந்து வழிந்தன. அதற்குப்பிறகும் அங்கு நின்று உணர்ச்சித் ததும்பல்களில் யாரும் ஆட்படவோ யாரையும் ஆட்படுத்தவோ விரும்பாமல் விடைபெற்றனர்.

ஒன்பது மணிக்கெல்லாம் சாவித்திரி அலுவலகத்திற்குக் கிளம்பினாள். போகும்போது அனிதாவிடம் அன்போடு விடைபெற்றாள். அனிதாவிற்குத் தான் சற்றே பயமும் சங்கோஜமுமாய் இருந்தது.

"என்ன அனிதா ஒருமாதிரி நெளிகிறாய்?"

"இல்லை அண்ணி.. நான் ஒன்றும் நெளியவில்லை" அனிதா, என்ன அண்ணி"? நான் ஒன்று கேட்பேன். எனக்காக நீ அதைச் செய்வாயா? சொல்லுங்கள் அண்ணி செய்ய காத்திருக்கிறேன். என்னை அக்கா என்று அழைப்பாயா? அண்ணி..?

"ஆமாம் அனிதா! நீ என் தங்கை... என் ஸ்நேகிதி. எனக்கு பிரியமானவள். புத்திசாலி. என்னை நீ அக்கா என்றால் நான் உன்னை எந்த உறுத்தலுமில்லாமல் நெருங்குவேன்.

"சரி அக்கா!" சிரித்தாள் அனிதா.

"அப்பா ... ! என் அனிதா சிரித்துவிட்டாள்.

"அக்கா.." குட் என்ன அனிதா.!

"நானும் உங்களைப் போலவே ஒரு வீராங்கனையாக வேண்டும். ஆண்களுக்கு அடிமை வேலை செய்ய மட்டும் நாம் பிறக்கவில்லை. நம்மால் இந்த மண்ணில் மகத்தான காரியங்கள் செய்ய முடியும் என்பதற்கு எடுத்துக்காட்டாய் வாழவேண்டும்! வெரிகுட்... வெரிகுட்.! அடேயப்பா... ! என் பாதையில் உன் கால்கள் அதிக தூரம் வந்தாகிவிட்டதோ ? குட் அனிதாவின் தோளை தட்டிக் கொடுத்தாள்.

"கொஞ்சம் பொறு. என் வேலை நிரந்தரமானதா, தற்காலிகமானதா என்பதெல்லாம் இந்த மே மாதம் முடிந்து ஜூன் பிறந்ததும் தெரிந்துவிடும். வேலை என்பது நிரந்தரமானால் உன்னை தினம் தினம் கன்னிமாரா லைப்ரரியில் உட்கார வைத்து எல்லா புத்தகங்களையும் கரைத்துக்குடி என்று சொல்வேன். வேலை நிரந்தரமில்லாமல் போனால் அடுத்த வேலை வரும்வரை நாமிருவரும் கன்னிமாராவை ஒரு கலக்கு கலக்கிவிடுவோம்." சிரித்தாள். இயல்பாகச் சிரித்தனர்.

அதெப்படி?

அதெப்படி அண்ணியால்... இல்லையில்லை. அக்காவால் எப்படி?

நினைத்தாற்போல் உணர்ச்சிப்பிழம்பை சுமந்து, நினைத்தாற்போல் ஆழ்ந்த குணமாய் அமைதியாகிப் போகமுடிகிறது..?

சிந்தித்தாள்... மனம் லேசாகியது. "நான் சமைத்துவிட்டுமா அக்கா?" "ம்ம்... ஜமாய்.. சொல்லிவிட்டு அலுவலகம் புறப்பட்டு போனாள்.

மாலையில் வீடு திரும்பும் போது அனிதா விரும்பிச் சூடும் கனகாம்பரம் வாங்கி வந்தாள். தானே தலைவாரி பூச்சூட்டினாள்.

"கடற்கரைக்குப் போகலாமா அனிதா?"

"ஓ... !போகலாம் அக்கா! முன்பு இரண்டுமுறை தங்கள் ஊர் கடற்கரைகளுக்கு போனதும் ஆர்ப்பரிக்கும் அலைகளைப் பார்த்துக் கைகொட்டிக் குதித்தாடி மகிழ்ந்ததும் மனக் கண்களில் வந்தது அனிதாவிற்கு.

"என்ன அனிதா யோசனை?"

"ஒன்றுமில்லை."

"கடற்கரை என்றதும் நீ எங்கு போய்விட்டாய் என்று எனக்குத் தெரியும். ஆமாம். அந்த கனவுகளே கனவுகளே... கதாசிரியர்... அதுதான் உங்கள் ஊர்க்காரரை நான் பார்க்கவே இல்லையே...? சாவித்திரி...

அவர் கூட இங்கே எங்கேயோ கும்மிடிப்பூண்டியாமே... அங்கு மாற்றலாகி வந்துவிட்டார்.

"ஆ...காங்...சரி புறப்படு.

கடற்கரைக்குப் போய் வந்தார்கள்.

அடுத்த நாள் சாவித்திரி அலுவலகம் போனதும் கதவடைத்து விட்டு உள்ளே சென்றாள் அனிதா.

படபட வென யாரோ கதவைத் தட்டும் ஓசை கேட்டது. கதவைத் திறந்தாள் அனிதா. எதிரே நிற்பவனைப் பார்த்ததும் திடுப்பென நெஞ்சில் பயம் கவ்வியது.

அவன்....?





**அமிர்தகனி**

**திருமண தகவல் நிலையம்**

**நாடார் சொந்தங்களுக்கு மட்டும் 9840948727.**

**தூத்துக்குடி, திருநெல்வேலி மாவட்டகளை பிறப்பிடமாக கொண்டு, இங்கு வாழும் அனைத்து வகை நாடார் சமூகத்தினருக்கும் வரன் பார்த்து கொடுக்கப்படும்.**

**மண் பொருத்தம், மனைப்பொருத்தம், மணப்பொருத்தம் இவை மூன்றுமே திருமணத்திற்கு போதுமானது.**

**எண்:5, 3வது தெரு, வள்ளலார் நகர், திருமுல்லைவாயல், சென்னை-600 063**

# வெற்றிப்படிக்கட்டு

வசந்த் & கோ H.வசந்தகுமார்M.A., Ex.MP (Member of Parliament)

## 86.அஸ்திவாரத்திற்கு அழகு தேவையா?



நாடு உனக்கு என்ன செய்தது.
என்று கேட்காதே
நாட்டுக்காக நீ என்ன செய்தாய்
என்று கேட்டுப்பார்.

இந்த அருமையான வாக்கியம் லெபனான் தீர்க்கதரிசி கலீல்ஜிப்ரான் சொன்னது. அமெரிக்கக் குடியரசுத் தலைவர் பொறுப்பை ஏற்றுக் கொண்டபோது ஜான் எப் கென்னடி இந்த மணியான வாக்கியத்தைத் தமது உரையில் குறிப்பிட்டது உலகையே கவர்ந்தது ஒன்றை நாம் எதிர்ப்பார்ப்பதற்கு முன் நாம் என்ன செய்தோம். நம்முடைய செயல்பாட்டின் மகிமை என்ன என்று யோசிக்க வேண்டும். சிந்திக்க வேண்டும் நாம் செய்ய வேண்டிய கடமையை முதலில் செய்யவேண்டும். அதுதான் வெற்றிக்கு வழிமுறை.

மகாத்மா காந்தியடிகளால் இந்தியாவின் மாணிக்கம் என்று போற்றப்பட்ட ஜவஹர்லால் நேரு இளம் வயதில் அலகாபாத் நகராட்சிக்குத் தலைவராக இருந்தார். ஒரு நாள், குடிநீர் வரி வசூல் செய்யும் அதிகாரி. வரி கட்டாதவர்களின் பெயர் லிஸ்ட் ஒன்றை நேரு அவர்களிடம் கொடுத்தார். "வரிகட்டாத சூழ்நிலையில் நகராட்சி என்ன நடவடிக்கை எடுக்கவேண்டும்" என்று அதிகாரி கேட்டார். நேரு உடனே "இதென்ன கேள்வி சட்டப்படி நடவடிக்கை எடுங்கள்" என்று சொன்னார். அதற்கு அந்த அதிகாரி தயங்கியபடியே இந்த லிஸ்ட்டில் முக்கியப் பிரமுகர்கள் பெயரும் இருக்கு" என்றுக் கூறினார்.



உடனே நேரு சட்டத்துக்கு முன் எல்லோரும் சமம் என்று சொன்னார். மறுநாள் தலைமை நீதிபதி தலைமைக்காவல் துறை அதிகாரி இல்லங்களில் ஜவஹர்லால் நேரு வீடு உள்பட பலர் வீட்டில் தண்ணீர் வரவில்லை. மோதிலால் நேரு மருகனிடம் இப்படி நகராட்சி நிர்வாகம் தண்ணீர் வருவதை நிறுத்தியதற்காகக் கோபமாகச் சண்டை போட்டார். அதற்கு நேரு, தந்தையிடம் "வரி கட்ட வேண்டியது ஒவ்வொரு குடிமகனுக்கும் இருக்கவேண்டிய கடமை, சட்டத்துக்கு முன்னால் அனைவரும் சமம்தான்" என்று கண்டிப்பாகக் கூறினார்.

அதே போல் லால் பஹதூர் சாஸ்திரியிடம் ஒரு நண்பர் "நாட்டுக்காக. மக்களுக்காக உங்கள் வசதிகளைக் குறைத்துக் கொண்டு இப்படி உழைக்கிறீர்களே. உங்களுடைய பெயர் கூட வெளியே தெரியாமல் செய்கிறீர்களே?" என்று கேட்டார். லால் பகதூர் சாஸ்திரி. அழகான தாஜ்மஹாலை உருவாக்க இரண்டு வகையான கற்களைப் பயன்படுத்தினார்கள். ஒன்று சலவைக்கல் பளபளப்பாக இருக்கும். மற்றொன்று பளபளப்பில்லாத அஸ்திவாரக்கல். பளபளப்பான பளிங்குக்கற்கள் தாஜ்மஹாலுக்கு அழகூட்ட மெருகேற்றி இருப்பார்கள். ஆனால் அஸ்திவாரக்கல் தாஜ்மஹால் உறுதியாக நிற்க அடித்தளமாக இருக்கும். அது வெளியே தெரியாது. ஆனால் பளிக்குக்கல் அப்படி இல்லையே அதன் அழகு பிரதிபலித்தால்தான் தாஜ்மஹாலுக்குப் பெருமை. அஸ்திவாரக்கல்லுக்குப் பளபளப்புத் தேவையில்லை. விடுதலைப் போராட்டத்திற்காகக் பாடுபட்டோம். இப்பொழுது நாட்டின் நன்மை கருதி உழைக்கிறோம்" என்று சொன்னாராம். இவர்களெல்லாம் நாட்டுக்காக செய்த செயல்கள், முயற்சிகள், போராட்டங்கள் தான் விடுதலை என்ற வெற்றியை நமக்கு அளித்தது.




# கண்ணீர் அஞ்சலி

தோற்றம் :
02.04.1965

மறைவு :
06.04.2024



R.K.அரிசி மண்டி உரிமையாளர்

## திரு. K.முத்துராஜ் நாடார்

அவர்கள்

06.04.2024 சனிக்கிழமை மாலை 3.10 மணியளவில்

## இயற்கை எய்தினார்

அன்னாரின் இறுதி ஊர்வலம் 07.04.2024 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணி அளவில் அவரது இல்லத்திலிருந்து புறப்பட்டு நல்லடக்கம் நடைபெறும் என்பதை தெரிவித்துக்கொள்கிறோம்...

குடும்பத்தினர்கள் மற்றும் உறவினர்கள் - கேளம்பாக்கம்

# கண்ணீர் அஞ்சலி



**துபாயில் பணிபுரிந்து வந்த மறைந்த சிம்மக்குரலோன் திரு.ஜே.எம்.ஜே.சௌந்திரம் அவர்களது புதல்வர் நண்பர் திரு.எஸ்.உதயராஜ் செல்வன் 59 துபாயில் விபத்தில் 11.4.2024 அன்று அகால மரணமடைந்தார். என்பதை வருதத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.**

# வருந்துகிறோம்



தோற்றம்
09.03.1946

மறைவு
10.04.2024

சென்னை - நெல்லை

## வேளாங்கண்ணி பள்ளிக் குழுமத்தின்

கல்வித் தந்தை

## திரு. S.சந்தனமுத்து B.Sc.,

அவர்கள் இன்று மாலை (10.04.2024 ) 5.00 மணியளவில் இறைவனடி சேர்ந்தார். அவர்களது இறுதிச்சடங்கு வெள்ளிக்கிழமை அன்று (12.04.2024 ) காலை 11.00 மணியளவில் ஒரகடத்தில் நல்லடக்கம் செய்யப்படும் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

இல்லம் : எண்.18, 3 வது தெரு, உதயா நகர் போரூர், சென்னை

குடும்பத்தினர்கள், உறவினர்கள், நண்பர்கள்,
வேளாங்கண்ணி பள்ளிகள் குழுமத்தித்தின் அனைத்து நிலைப் பணியாளர்கள்.
பெற்றோர்கள் மற்றும் மாணவர்கள்

9941954917 / 9840980866

# கண்ணீர் அஞ்சலி



எங்களது அன்பு தாயார் திருமதி.எஸ்.தமயந்தி அம்மாள் வயது 94 அவர்கள் 20.4.2024 அன்று இயற்கை எய்தினார். என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். ஏவிஎஸ் குடும்பத்தினர்கள் ஏவிஎஸ் மாரிமுத்து 9500023099.முகவரி:தமயந்தி டெக்ஸ்டைல்ஸ் 91/3, எம்.சி.ரோடு, வண்ணாரப்பேட்டை, சென்னை-21

# காமராஜர் ஒரு சகாப்தம்

### விடுதலை வேள்வியில் காமராஜ்

ஏ.கோபண்ணா.

அந்த காலத்தில் கூட்டம் நடைபெற இருப்பதைத் தமுக்கு அடித்து அறிவிப்பார்கள். இந்த முறையை மாற்றி, காங்கிரஸ் இயக்கத்தின் முக்கியமான அறிவிப்புகளையும் காந்தியடிகளின் முக்கியமான பேச்சுக்களையும் நோட்டீஸ்களாகஅச்சடித்து மக்களிடையே கொடுக்கும் வழக்கத்தைக் காமராஜ் ஏற்படுத்தினார். இதற்கு மக்களிடையே நல்ல வரவேற்பு இருந்தது. இந்த வகையில் காமராஜ் முதல் நோட்டீஸை, விருதுபட்டி ஊர் புரேகிதர் ராமலிங்க குருக்கள் நடத்தி வந்த சச்சிதானந்தம் அச்சாபீஸில் அச்சடித்து வெளியிட்டான். பொதுக் கூட்டங்கள் நடத்துவதற்கும் நோட்டீஸ்களை அச்சிட்டு வழங்குவதற்கும் பணம் தேவைப்பட்டது. காமராஜின் நண்பர்கள் இயன்ற அளவுக்கு உதவி செய்தார்கள். அது போதுமானதாக இல்லை. விருதுபட்டியின் பெருந்தனக்காரர்களான நாடார்கள், பெரும் பகுதியினர், ஜஸ்டிஸ் கட்சியின் ஆதரவாளர்களாகவே இருந்தார்கள். அவர்கள் ஆங்கிலேயருக்கு எதிராகவோ, ஜஸ்டிஸ் கட்சிக்கு எதிராகவோ செயல்பட விரும்பவில்லை. எனவே, காங்கிரஸ் கட்சிக்கு ஆதரவு தர மறுத்தனர். பொருளுதவி செய்வதைத் தடுக்கவும் செய்தார்கள். இந்த மாதிரி எதிர்ப்புச் செயல்களால் ஜஸ்டிஸ் கட்சிக்காரர்கள், காங்கிரஸ் கட்சியின் வளர்ச்சிக்குத் தடைகளை ஏற்படுத்திக் கொண்டே இருந்தார்கள். இப்படிப் பட்ட சூழலில் கட்சிப் பணிக்குக் கடை வீதிகளிலும் தெருக்களிலும் செய்த பண வசூல், ஏச்சுக்கும் பேச்சுக்கும் உள்ளானது.

நண்பர்களுடன் கலந்து ஆலோசித்த காமராஜ், இனி வெளியூர் மக்கள் வந்துசெல்லும் இடங்களில் வசூல் செய்வது என முடிவு செய்தான். உண்டியல்கள் தயாராயின. ரயில் நிலையம் சென்று வசூல் செய்ய முயன்றார்கள். ஆறு அணாவோ (இன்றைய 36 பைசா) எட்டு அணாவோ (இன்றைய ஐம்பது பைசா) வசூலானது. எதிர்பார்த்த அளவுக்கு வசூல் இல்லை. வைகாசித் திருவிழாவின் கடைசி நாளன்று, தேசபந்து மைதானத்தில் பொதுக்கூட்டத்திற்கு ஏற்பாடு செய்தான். உண்டி வசூலில் தேவையான அளவுக்குப் பணம் கிடைக்கவில்லை, அன்றைய கூட்டச் செலவைப் பம்பாய் அண்ணாச்சி ஏற்றுக் கொள்வதாகக் கூறினார். இருந்தும், காமராஜ் உண்டியல்களின் மேல் "காந்தி உண்டியல்" என எழுதி ஒட்டினான். காமராஜின் நண்பர்கள் பிளாட்பாரம் டிக்கட் வாங்கிக் கொண்டு வழக்கம் போல் ரயில் நிலையத்தில் நுழைந்தார்கள். ரயில் வண்டி வந்ததும், பெட்டிகளில் ஏறி "காங்கிரஸ் கமிட்டி உண்டியல் ! ஏதாவது போடுங்கள்! வந்தே... மா...தரம்!" என்று கூறியபடி உண்டியலைக் குலுக்கினார்கள்.

ஒரு பெட்டியின் முன் மக்கள் கூட்டம் அதிகமாக இருந்ததைப் பார்த்துக் காமராஜ் அங்கு விரைந்தான். கழுத்தில் ரோஜாப்பூ மாலையுடன், ஆர்வி கம்பெனி துரை நின்றிருந்தார். சென்னை சென்று, லண்டன் செல்வதற்காக வண்டி ஏற வந்த துரையை வழியனுப்பவந்த ஆர்வி கம்பெனி ஊழியர்கள், உள்ளூர் மற்றும் வெளியூர் வியாபாரிகள் அங்கு நிறைந்திருந்தார்கள். ஆர்வி கம்பெனி புரோக்கர் கந்தசாமிப் பிள்ளையும் அங்கே நின்றிருந்தார். நண்பர்கள் தடுத்தும் கேட்டுகாமல் விரைவாகச் சென்ற காமராஜ், அந்தக் கூட்டத்தில் நுழைந்து உண்டியலைக் குலக்கத் தொடங்கினான். இதைப் புதுமையாக உணர்ந்த துரை, புரோக்கர் கந்தசாமி பிள்ளையிடம் விசாரிக்க, அவர் ஆங்கிலத்தில் காமராஜின் செயலை விளக்கிக் கூறினார். உடனே துரை (துணிவுமிக்க இளைஞர்கள்! அபாரமான யோசனை) என்று பாராட்டினார். வெள்ளைக்காரத்துரையே காமராஜின் செயலைப் பாராட்டிவிட்டதால், அவரைச் சூழ்ந்திருந்த கருப்புத் துரைகளுக்கு உற்சாகம் வந்துவிட்டது. பருத்திக் கமிஷன் வியாபாரி மூளிபட்டி ஜமீன்தார் சங்கு ரெட்டியார் போணி பண்ணுவதுபோல் நாலணாவை (இன்றைய 25 பைசா) உண்டியலில் போட்டார். புரோக்கர் கந்தசாமிப்பிள்ளை வழிமொழிவது போல் காசு போட்டார் தொடர்ந்து பலரும் காசு போட உண்டியல் கனத்தது. அன்றைய கூட்டம் சிறப்பாக நடைபெற்றது.

- தொடரும்........



டாக்டர் பா.சிவந்தி ஆதித்தனாருக்கு 11ம் ஆண்டு நினைவு அஞ்சலி முன்னிட்டு சிவந்தி ஆதித்தனார் மணிமண்டபத்தில் நேரில் சென்று விஜிபி குழுமங்களின் தலைவர் செவாலியர் டாக்டர் வி.ஜி.சந்தோசம் அவர்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

# நாடார் சமூகத்தின் போராட்ட வரலாறு

## 8.நாடார்களின் பிரிவுகள்

தொகுப்பு ஆசிரியர்:சு.செந்தமிழ்ச் செல்வன்
செல்:98412 26856.

திருவெண்காடு தாமிரப் பட்டையத்தில் ஒரு பக்கம் 46 படங்கள் இருக்கின்றன. அவற்றில் காளியம்மை படம், ஏனாதி படம், சிங்கமுத்து தண்டிகை படம், பஞ்சவர்ண பாவாடைப் படம், இரட்டை வெள்ளை யானைப் படம், ஆராய்ச்சி மணி படம், இரட்டை சங்கு படம், இரட்டை வெண்குடை படம், இரட்டை வெண்சாமர படம், இரட்டை சிலம்பு படம், சான்றோர் காசு படம் மற்றும் மறுபுறம் சான்றோர் குலத்துச் செய்திகள் பொறிக்கப்பட்டுள்ளன.



மலையாளத்தில் நாடார் இனத்தின் ஒரு பிரிவினரை "சான்றார்" என்று அழைத்தனர்.. யாழ்ப்பாணத்திலும் இதே பொருளில் வழங்கப்பட்டனர். இலங்கையில் உள்ள நாடார் சமூகத்தினர் "சான்றார்" என்றே அழைக்கப்பட்டனர்.

எஸ்.வின்பிரட் என்பவர் "சான்றோர் குல மரபுக் கட்டளை (1868)" என்ற புத்தகத்தில் நாடார் பாண்டிய மன்னரின் வழி வந்தவர்கள், உயர்ந்த பண்புகளை நிலை நாட்டி, சத்திரியர்களது பழக்க வழக்கங்களைக் கொண்டு உள்ளனர் என்று தெரிவிக்கிறார் உ.வே.சாமிநாத அய்யரின் தமிழ் பேரகராதியில் சான்றோர் என்பது குலப்பெயர் என்றும் "சான்றாமையை" கள் இறக்கும் தொழிலை குறிப்பதாகவும், சான்றார் என்பதும், சாணர் என்பதும் ஒன்றே என்று கருதுகிறது.

குமரகுருபர சுவாமிகள், தன்னுடைய மதுரைக் கலம்பலகத்தில், குற்றமற்ற மரபினர் சான்றோர் என்று குறிப்பிடுகிறார். தமிழில் சான்றோர் என்பதற்கு அறிவாளி, சிறப்பான பண்பு உடையவர் என்று பொருள்கள் உண்டு.

தமிழ் புராதன ஆராய்ச்சி சங்கத்தின் நிறுவனரும், தமிழ் பண்டிதருமான சவுரியா பிள்ளை, திருக்குறள் உரை ஆசிரியர் பரிமேலழகர் சான்றோர் சாதியின் குருக்கள் வகுப்பைச் சேர்ந்தவர் என்று குறிப்பிடுகிறார்.

சான்றோர் வகுப்பில் பிறந்த சென்னவீர அய்யர் என்பவர் "தொல்காப்பியம் சொல் அதிகாரத்திற்கு உரை எழுதினார் குமரகுருபர சுவாமிகள் ஆத்மராமாயணம், நானக் குறவஞ்சி, கிள்ளை விடுதூது, மயில் விடுதூது, தென்றல் விடுதூது போன்ற தமிழ் நூல்களைப் பாடியிருக்கிறார். 1939ஆம் ஆண்டு விருதுபட்டியை சேர்ந்த ராமலிங்க குருக்கள் "நாடார் மன்னரும், நாயக்க மன்னரும்!" என்ற நூலை எழுதி இருக்கிறார்.

தொண்டை வளநாட்டுச் சான்றோர் குலத்தவருக்கு கிராமணிகள் எனப்பட்டப் பெயர் உண்டு என்று சான்றோர் மரபு காத்தல் என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. சான்றோர்களுக்குள்:

1)பட்டாயச் சான்றோர். 2.நாட்டத்திச் சான்றோர். 3.மகாநாட்டு சான்றோர், 4.மேனாட்டுச் சான்றோர், 5.தொண்டை மண்டலச் சான்றோர் என்று ஐந்து பிரிவுகள் இருந்ததாக திரு.சவின்பரிட்டு (1874) குறிப்பிடுகிறார்.

சென்னை, செங்கை, தர்மபுரி, சேலம் ஆகிய மாவட்டங்களில் சான்றோர் மரபினரை "நாட்டார்" என்றே அழைப்பார்கள். தென்மாவட்டங்களில் "நாடார் என்றும், புதுக்கோட்டை பகுதிகளில் "நாடாவி" என்று அழைப்பதும் வழக்கு.

நாடார் குடிமக்கள் சான்றோர்களோடு தொடர்புடைய மருத்துவ குலத்தினரை "நாடார் குடிமக்கள்" என்று கூறுவது உண்டு.

திருச்செந்தூர் சுப்ரமணிய சுவாமி கோயில் இவர்களுக்கு அமைந்த மண்டகப்படி என்று பெயர்.,

சான்றோரில் தலைமையாய் இருப்போர் "நாடான்" என்ற பொதுப் பெயரில் அழைக்கப்படுவதாக திருவிதாங்கூர் திவான் வி.நாகம்மையா எழுதி உள்ளார்.

சான்றோரில் உயர்வகுப்பினர் நாடார் என்று அழைக்கப்பட்டனர்.

13. சாணார்.:

19ஆம் நூற்றாண்டில் வெளியிடப்பட்ட அகராதிகள் "சாணார்" என்றால் புத்திக்கூர்மை உடையவன், செயல்திறன் மிக்கவன் என்று கூறுகின்றன.

1.சாணான் -கெட்டிக்காரன்,

2.சாணன் கெட்டிக்காரன் சாணான் -சான்றான்- தமிழ்ப் பாசை அகராதி (யாழ்பாணம் 1842)

3.சாணன் - நிபுணன்.

சாணான். ஒரு சாதியான், வின்ஸலோ அகராதி

4) சாணன்- சாணார், சாணாருட் பெரியவன் சான்றான். சாணன் - கெட்டிக்காரன்

சாணான் - ஒரு /சாதியான், சான்றான்- தமிழ்ப் பேரகராதி (யாழ்ப்பாணம் 1899)

சாணான், சாணான் இரண்டு சொற்களுமே ஒரே பெயரையே குறிப்பிடுகின்றன.

தந்தை மாவட்ட கையேட்டில் நாடார் சமூகம் அவர்கள் இறக்கும் மரங்களின் வகைகளைப் பொறுத்து பின்வருமாறு பிரிக்கப்பட்டுள்ளது.

- தென்னஞ் சாணார் (தென்னை மரம்)
- பனஞ்சாணார் (பனை மரம்)
- ஈச்சஞ் சாணார் (ஈநதை மரம்)

- தொடரும்.......


AB
Dr.M.Sundaralingam B.SC.,B.VSC.,
PH:24895266 CELL: 9444015277
ஆர்த்தி பிராய்லர்ஸ்
77, Nedunchezhian Street, (opp. M.G.R. Nagar Market)
M.G.R.Nagar, Chennai-78.

SSS
Cell:9884687675, 9488491671.
அய்யா துணை
திருமண தகவல் மையம்
அமைப்பாளர்: P.சக்திவேல் நாடார்.
பூர்வீகம் நாடார் உவரி எண்:42, அன்னை கமலா நகர், வீராபுரம் மெயின் ரோடு, நியூ காலனி பஸ் ஸ்டாப், ஆவடி, சென்னை-600 055.





# சிவந்தி ஆதித்தனார் சாதனை சரித்திரம்

பத்மஸ்ரீ டாக்டர் சிவந்திஆதித்தனார் சாதனைச் சரித்திரம் அ.மா.சாமி.

## விமானம் கடத்தல்

**சமரசப் பேச்சு:-**

ஆனால், அவனிடம் வெடிகுண்டு எதுவும் இருக்க வாய்ப்பு இல்லை என்று அதிகாரிகள் நினைத்தனர். இருந்தாலும் பாதுகாப்பை கருதி, அதிகாரிகள் மிகுந்த எச்சரிக்கையுடன் செயல்பட்டனர்.

விமான நிலைய தகவல் தொடர்பு மையத்தில் இருந்து, கடத்தல் காரனுடன் அதிகாரிகள் சமரசப் பேச்சு நடத்தினார்கள். விமானத்தை கடத்தியவன் முதலில் யாருடனும் பேச மறுத்துவிட்டான். நீண்ட நேரம் மவுனமாக இருந்தான். அதன் பிறகே அவன் தனது கோரிக்கைகளை வெளியிட்டான்.

முதலில் கடத்தல்காரன், லாகூருக்கு செல்ல விரும்புவதாகவும், அங்கு பத்திரிகை நிருபர்களை அழைத்து அயோத்தியில் பாபர் மசூதி இடிக்கப்பட்ட சமபவத்தை அனைவரும் அறியும் வகையில் சொல்லப் போவதாகவும் கூறினான்.

விமானத்தில் உள்ள பயணிகளையும் விமான சிப்பந்திகளையும் விடுதலை செய்துவிட்டால் அவனை லாகூருக்குக் கொண்டு செல்வதாக அதிகாரிகள் உறுதி அளித்தனர்.

அதை ஏற்கக் கடத்தல்காரன் மறுத்து விட்டான். பின்னர் அவன், டெல்லி போக விரும்புவதாகக் கூறினான்.

அதிரடிப்படை:- இதற்கிடையே, கடத்தல்காரனிடம் இருந்து விமானத்தையும், பயணிகளையும் பத்திரமாக மீட்க, அதிரடிப் படையினர் வர வழைக்கப்பட்டனர். அவர்கள் விமான நிலையத்தை சுற்றிலும் நிறுத்தப்பட்டனர்.

பஞ்சாப் மாநில போலீஸ் "டி.ஜி.பி." கே.பி.எஸ் கில் மற்றும் உயர் போலீஸ் அதிகாரிகளும் அங்கு விரைந்தனர்.

**4 பக்க மனு:-**

சிறிது நேரம் கழித்து, விமான கடத்தல்காரன், விமானத்தில் இருந்தபடியே, வெளியே இருக்கும் நிருபர்களிடம் தொடர்பு கொண்டு பேச விரும்புவதாகக் கூறினான்.

இதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. பிறகு அவன், 4 பக்க கோரிக்கை மனு ஒன்றை, விமானத்தில் உள்ள வயர்லெஸ் கருவி மூலம் விமான தளத்தில் இருந்த நிருபர்களிடம் வாசித்தான்.

அதில் அவன் கூறி இருந்ததாவது:-

**வகுப்புக் கலவரம்:-**

நான் செய்வது சரியா தவறா என்பதும், எனது செயலைப் பற்றி மக்கள் என்ன நினைப்பார்கள் என்பதும் எனக்குத் தெரியாது. இந்திய மக்கள்தான் இதைப் பற்றி முடிவு செய்யவேண்டும்.

"நான் ஒரு உண்மையான தேசியவாதி. இந்து மதத்தைச் சேர்ந்தவன். இந்தியாவில் இப்போது வகுப்புவாதமும், கொடுங்கோன்மையும் நிறைந்துவிட்டன. மத்தியில் உள்ள இ.காங்கிஸ் அரசு, இதை எல்லாம் சரி செய்து அமைதியான நிலைமை திரும்பச் செய்ய முடியாத நிலையில் உள்ளது.

**நரசிம்ம ராவ்:-**

பல வாக்குறுதிகளைக் கொடுத்து இ.காங்கிரஸ் ஆட்சியைப் பிடித்தது. ஆனால் துரதிஷ்டவசமாக இ.காங்கிரஸ் அரசு அனைத்து முனையிலும் தோல்வியைக் கண்டது.

பிரதமரும், நிதி மந்திரியும் வெளிநாடுகளிடம் கையேந்திக் கொண்டு இருக்கிறார்கள்.

பிரதமர் நரசிம்ம ராவ் பலவீனமானவராக இருக்கிறார். அவரால் இந்த நாட்டை ஆள முடியாது. அவர் இனிமேலும் ஆட்சியில் நீடிக்கத் தகுதி இல்லை.

பாபர் மசூதியை பாரதீய ஜனதாவும் அதன் தோழமை கட்சிகளும் இடித்துத் தள்ளியதால், இந்தியா முழுவதும் வகுப்புக் கலவரமும் வெறுப்பும் பரவின. வனமுறை தாண்டவமாடியதால் அப்படி உயிர்கள் பழிவாங்கப்பட்டன.

சிறுபான்மையினருக்கு இந்தியாவில் பாதுகாப்பே இல்லை.

**பெருமைப்படுகிறேன்::-**

இந்த பிச்சினைகளை எல்லாம் நரசிம்ம ராவ் தீர்க்கத் தவறிவிட்டார். இதனால், ஆங்கிலேயர் ஆட்சியில் சுதந்திரப் போராட்டத் தியாகிகள் செய்தது போன்ற செயலை நான் செய்து இருக்கிறேன். - தொடரும்.......

# கேள்வி? பதிலில்?...... முதியோர் நல மருத்துவம்

பத்மஸ்ரீ டாக்டர்.வி.எஸ்.நடராஜன், மூத்த முதியோர் நல மருத்துவம்.044-26412030.

**கீழே விழாமல் இருக்க...**

கேள்வி: கீழே விழாமல் நலமுடன் வாழ முதியோர் என்ன செய்ய வேண்டும்? சற்று விளக்கமாக எழுதுங்கள், டாக்டர்.

பதில்:

❖ உடலை முழுமையாக பரிசோதனை செய்து, கீழே விழுவதற்கு நோய்கள் ஏதேனும் காரணமா என கண்டறிந்து தகுந்த சிகிச்சை அளிக்க வேண்டும்.

❖ கண்பார்வை சரியாக உள்ளதா என்பதை பரிசோதனை செய்து கொள்ள வேண்டும்.

❖ காதை முழுமையாக பரிசோதனை செய்து கொள்ளவேண்டும் காதில் அழுக்கு சுத்தம் செய்யப்படாமல் இருந்தால் கூட நிலை தடுமாறலாம். அதை அகற்றிவிட்டால் இது போன்ற தொல்லைகள் ஏற்படாது.

❖ முதியவர்கள், தாங்கள் உட்கொள்ளும் மருந்துகளைப் பற்றியும் மருத்துவரிடம் கலந்தாலோசிக்க வேண்டும், ஏனென்றால் மருந்துகளின் பக்க விளைவுகளால் கூட கீழே விழ வாய்ப்பு உண்டு.

❖படுக்கையில் இருந்து எப்போதும் வேகமாக எழுந்து, உடனே நடக்கக்கூடாது. தொடர்ந்து படுக்கையில் படுத்திருப்பவர்கள் எழும்போது முதலில் மெதுவாக எழுந்து உட்கார வேண்டும். பிறகு சற்று நேரம் கழித்து மெதுவாக நிற்க வேண்டும். அதன் பின்னரே நடக்க வேண்டும்.

❖நடக்கும் போது கைத்தடி அல்லது தேவையான உபகரணங்களை உபயோகிக்க வேண்டும். மற்றவர்கள் கேலியாகப் பார்ப்பார்கள் என்று கூச்சப்படத் தேவையில்லை. நம் உடலை நாம் தான் பேணிக்காத்துக் கொள்ள வேண்டும்.

❖கால்களுக்குப் பொருத்தமான காலணிகளை அணிவது சிறந்தது.

❖தினமும் தவறாமல் செய்யும் உடற்பயிற்சி, தசைகள் மற்றும் மூட்டுகளின் திறனை அதிகப்படுத்தி கீழே விழுவதைத் தடுக்க உதவுகிறது. உடலைச் சரிசமமாக வைத்துக்கொள்ள சிறப்பு உடற்பயிற்சிகளும் தேவை.

❖படுக்கை அறை, குளியல் அறை, படிக்கட்டுகளில் போதுமான வெளிச்சம் இருக்குமாறு பார்த்துக் கொள்ளவேண்டும்.

❖முதியவர்கள் அதிகமாக பயன்படுத்தும் இடங்களில் இரும்புக்கைப் பிடிகளை பொருத்த வேண்டும். உதாரணம்: குளியலறை, கழிவறை, படிக்கட்டு.

❖குளியலறை வழுவழுப்பு இல்லாமலும், தண்ணீர் தேங்காமலும் பார்த்துக் கொள்ளவேண்டும்.

❖இரவு விளக்குகளை பொருத்த வேண்டும்.

❖அறையில் நுழைந்த உடனே விளக்கு போடும் பொத்தானை தொடும் உயர்நிலையில் பொறுத்தவேண்டும்.

❖படிக்கட்டுகளின் உயரம் 15 செ.மீ.க்கு மேல் இல்லாமல் இருக்கும்படி பார்த்துக் கொள்ளவேண்டும்.

❖தரைவிரிப்புகளை முடிந்தவரை போடாமல் இருப்பது நல்லது.

❖குளியல் அறையில் உள்ள தாழ்ப்பாள்களை நீக்கிவிடவேண்டும். குளியல் அறையில் வெளியிலிருந்து தாழ்ப்பாளை திறக்குமாறு பார்த்துக் கொள்ளவேண்டும்.

இறுதியாக... நடந்தால் நாடும் உறவாடும்... படுத்தால் பாயும் பகையாகும் என்பதை அடிக்கடி நினைவில் கொள்ளுங்கள்!

கீழே விழுதலினால் விளையும் தொல்லைகளின்றி நாமும் மற்றும் நம்மை சார்ந்தவர்களும் நலமுடன் வாழ்வோம்!

**தொகுப்பு: - எல்மாமதி..**


Ayya Thunai

MUTHU CONSULTANCY

M.Jayaselvam (33AMAPJ1834H2ZH)

ALL BUSINESS REGISTRATION, INCOME TAX, GST, TDS FILINGS & LOAN ARRANGEMENTS.

NO:14, V.V.GIRI SALAI, JAFFERKHANPET, CHENNAI-83,
INFO@MUTHUCONSULTANCY.COM 8807333334, 8778720020.

Aluminium:-
★Doors ★ Windows ★Partitions
Gypsum Board:-★Partition ★False Ceiling
Glass Elevation work and all interior work.

M.Sankareswaran
Cell:9444101695.
9841815118.



Shanukar Decor
The Interior People



No:133, 1 Block, M.M.D.A. Colony, Arumbakkam,
Chennai-106. Email:shanukardecor@yahoo.com

# மானாடும் மானாட்டாரும்: கி.பி.1600 விடியலிலிருந்து-13

(கொங்குநாட்டுச் சான்றோர் குலச் செப்பேடுகள் தொடர்ச்சி)

டாக்டர் ஆ.தசரதன் 9444169603.



கி.பி.1600ஆம் ஆண்டிலிருந்து கி.பி.1700ஆம் ஆண்டு வரையிலான ஒரு நூற்றாண்டுக் காலத்தில் நாடார்களின் வரலாற்றை ஆவணங்கள் வழி ஆராய்ந்து வழங்கிவரும் இத்தொடர்க்கட்டுரைகளில் 2024ஆம் ஆண்டு ஏப்ரல் மாத இந்தியன் நாடார் முரசில் கொங்கு நாட்டுச் சான்றோர் குலச் சமுதாயச் செப்புப் பட்டயங்களில் கருமாபுரம் பட்டயத்தில் உள்ள சில விபரங்களைப் பார்த்தோம். அதனைத் தொடர்ந்து பார்க்கலாம்.

கி.பி.1670 ஆம் ஆண்டுவாக்கில் எழுதப்பெற்ற கருமாபுரம் சான்றோர் குலச் செப்புப்பட்டயமும் அதன் நகல் உள்ள பெருந்துறை சான்றோர்குல மடமும் இக்கட்டுரையில் தொடர்ந்து விளக்கப்பெறுகின்றன.

கி.பி.17ஆம் நூற்றாண்டின் மையத்தில் கொங்கு நாட்டிலிருந்த சான்றோர் குலத்தினர் -அதாவது, சேர, சோழ, பாண்டியர் வம்சத்தவராயிருக்கும் ஏனாதிச் சான்றோர் முதலான ஏழுப்பட்டத்தார் ஒன்றுகூடி, திருஞானசம்பந்தர் வழிவந்த ஸ்ரீ கருணாகர பண்டிதரான ஆண்ட சிவ சுப்பிரமண்ய பண்டிதரைத் தம் குருவாக ஏற்று அவருக்கு எழுதிக் கொடுத்த பட்டயம் இதுவாகும்.

இப்பட்டயத்தில் தங்கள் தாயாகிய பத்திரமா காளியைக் கோவில் எடுத்துப் பூசித்து வரவேண்டும் என்று அவரிடம் கோரியுள்ளனர்.

அடுத்து, சான்றோர் குலத்தினரின் வீரதீரச் செயல்கள், பெற்ற வரிசைகள், பட்டங்கள், பிறசமுதாயத்தினரைப் பாதுகாத்தமை, போன்றவை பட்டியலிடப்பட்டுள்ளன. இப்பட்டியலில் இடம் பெறுபவை வலங்கை மாலையில் வருபவற்றுடன் பல இசைந்துள்ளன.

தங்கள் குருவானவருக்குச் சான்றோர் குலப் பட்டத்தார் அனைவரும் சேர்ந்து, ஆண்டுக்குக் குடும்பம் ஒன்றுக்கு 5பணமும் சிவபூசைக்குப் படியும் கொடுத்து வந்துள்ளனர். மேலும், தங்கள் சாதிப்பிள்ளை கூத்தாடிகளுக்கு ஈழத்துப் பேரும் இலங்கைப் பேரும் கொடுத்து விருது எடுத்து ஆடி வருவதுக்காகக் குடும்பம் ஒன்றுக்கு ஒரு பணமும் சாப்பாடும் எங்களுக்கு அடிமைப்பட்ட பணிசவனுக்குக் கட்டின வீட்டுக்குக் கால்பணமும் கலியாணத்துக்கு ஒரு பணமும் சாதி ஞாயத்தில் கட்டுக் காணிக்கை ஒரு பணமும் இப்படிக்குக் கட்டளை, இந்தப் படி எங்கள் அனைவோருடைய சம்மதி சாசனம் என்று எழுதிக் கொடுத்துள்ளனர்.

எப்பேர்பட்ட வரலாற்றுச் சமூகப் பண்பாட்டைக் கொண்டவர்கள் சான்றோர்குலக் கொங்கு நாட்டுச் சமுதாயத்தினர் எனத் தெளிவாகத் தெரியவருகிறது அல்லவா!

கொங்குநாட்டுச் சான்றோர்குலந்தினரின் இவ்வாறான வரலாற்றுச் சமூகப் பண்பாடுகள் எல்லாவிடங்களிலும் உள்ள சான்றோர் குலத்தினரும் கொண்டுள்ளவைதாம். சில பழக்க வழக்கங்கள் கூடுதலாகவும் சில குறைவாகவும் இடத்துக்கேற்ப அமைந்துள்ளன. இவற்றை வேறு இடங்களில் ஆராயலாம்.

கருமாபுரம் சான்றோர் குல மடத்தில் அந்தணர் குருவாயிருந்து காளி வழிபாட்டை மேற்கொண்டு வருவதைக் கண்டும் பட்டயத்தை நகலெடுத்தும் நாங்கள் மூவரும் பெருந்துறையில் உள்ள சான்றோர்குல மடத்துக்குச் சென்றோம்.

கருமாபுரம் சான்றோர்குல ஜலத்குரு ஸ்ரீ ஆண்ட சிவசுப்ரமண்ய குருக்கள் வழிவந்த சான்றோர் குல மடத்தின் தாயாதிகளான பெருந்துறை சான்றோர் குலக் குருக்களுக்கும் கருமாபுரம் பட்டயமே சான்றுப் பட்டயமாகத் திகழ்கின்றது. மேலும், “பெருந்துறை சான்றோர் குல மடத்தில் உள்ளன.

இம்மடத்திலிருந்த அந்தண குருக்கள் செய்த காளிக்கோயில் பூசையில் நாங்கள் கலந்து கொண்டோம்.

கருமாபுரம் வட்டாரச் சான்றோர் குலத்தினர் போல் பெருந்துறை வட்டாரச் சான்றோர் குலத்தினரும் இம்மடத்தைப் புரந்துள்ளனர் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

அடுத்ததாக நாங்கள் அடைந்த ஊர் அவல்பூந்துறை எங்களை அழைத்துச் சென்ற கால் நடைத்துறை மருத்துவர் அவர்களுக்கு இத்தருணத்தில் மிகவும் காலந்தாழ்த்தி நன்றியைத் தெரிவிக்கின்றேன்.- தொடரும்..........


## விருதுநகர் இந்து நாடார் வியாபாரிகள் சங்கம்
## திருமண தகவல் மையம்

**இந்து நாடார்களுக்கு மட்டும்.**(மணமகன்/மணமகள்) செயல்படும் திருமண தகவல் மையம்
பதிவு கட்டணம் 200 மட்டும். வேறு எந்தவித கட்டணமும் கிடையாது. மணமகன்/மணமகள் தேவைப்படுவோர் பதிவு செய்து பயன்பெறும்படி கேட்டுக்கொள்கிறேன். (வசதி குறைவானவர்களுக்கு பதிவுகட்டணம் கிடையாது).

**மா.பட்டாணி நாடார் நினைவு டிரஸ்ட்,** 156,மெயின்பஜார், விருதுநகர், செல்:9486555373, 8610212126.

# EAGLE PRESS

Ph:25952694

“DIARY HOUSE”

35, M.S. Koil Street, Chennai-13.
Tamil Nadu
email:
eagle@giamd01.vsnl.net.in
www.eaglepressgroup.com

# பிறந்த நாள் வாழ்த்துக்கள்!!!

## 25.05.2024 அன்று பிறந்த நாள் காணும்



## Lion.R.ரூபி.மனோகரன்

அவர்கள் பல்லாண்டு வாழ வாழ்த்துக்கள் மேலும் அவர் கட்டிடக்கலை துறையில் பல சாதனைகள் புரிய நாடார் முரசு வாழ்த்துகிறது.

---

நாடார் திருமணச் சேவையில் 19 ஆம் ஆண்டில் கைராசியான

## நாடார் விவாகம் திருமணத் தகவலகம்



36, காந்தித்தெரு, பூவரசூர், ஆறுமுகனேரி-628 202

செல்:9176051116, 9360539833. 04639-282222. 04639 296108.

nadar vivaham matrimony / www.nadarvivaham.in/

புரோக்கர் கமிசன் இல்லை. காலை:9:30 -12.30 மாலை 5.00 -6.00 ஞாயிறு விடுமுறை.

இணையதளத்தில் பதிவுக்கட்டணம் இலவசம்.

### தென்றல் திருமணத் தகவலகம்

பதிவுக் கட்டணம்:ரூ.3000 /சேவை கட்டணம் உண்டு.

முனைவர் த.த.தவசிமுத்து M.A., Phd.,

---



மரந்தலை மாடசாமி துணை

செல்:9840685266, 9380879313.



## MARS

### மார்ஸ் திருமண தகவல் மையம்

சென்னையில் 30 வருடமாக பெரும் தொழில் அதிபர்கள், டாக்டர்கள், இஞ்சினியர்கள், அனைவருக்கும் நிறைய திருமணங்கள் நடத்தி கொடுத்தவர் இந்து நாடார், கிறிஸ்துவ நாடார் சமுதாயத்தின் கைராசியான திருமண தகவல் மையம் அனைத்து மாவட்ட நாடார்கள் தொடர்புகொள்ளவும்.

**வேம்பார் கனகராஜ் நாடார். வீடு, மனை, தோட்டம் வாங்க விற்க அணுகவும்.**

நெ.25, நேதாஜி தெரு, அன்னை இந்திரா நகர், மூலச்சத்திரம், சென்னை-51,

---



அரிசி மொத்த வியாபாரம்.

செல்:9840994451, 26380752 / 73.



## சிவசக்தி ரைஸ் டிரேடர்ஸ்

286, சி.டி.எச்.ரோடு, செல்வராஜ் காம்ப்ளக்ஸ், ஆவடி, சென்னை-54.

## செல்வராஜ் சூப்பர் மார்கெட்

286/1, சி.டி.எச்.ரோடு, ஆவடி, சென்னை-600 054.selvarajsupermarket@gmail.com

தொகுப்பு:M.செசீலிஸ்டீபன்
இராஜாவூர், செல்:9486356746

# மரம் வளர்ப்போம் பசுமை நிற பனைமரம் வளர்ப்போம் தமிழக பசுமை பனைமர செழுமையே!!!

முன்னுரை:

பனைமரம் தமிழன் மரம்
அது தமிழ் மரம்!
தமிழக மண்ணின் மரம்!
தமிழக பசுமை! பனைமரம்!!
தமிழக அமுதசுரபி! பனைமரம்!
தமிழ் தாயின் அமுதம் தமிழ் தமிழ் உயிர் காத்து தமிழ் காத்தான்.
பனை மர ஓலைச்சுவடி தமிழைக்காத்த தனிப்பெருமையுடைத்தது.
பனை மரத்தின் மாண்பு பனை மரம்போல் நிமிர்ந்து உயர்ந்தது மலர வேண்டும்!!!



தமிழக மண்ணின் மரம் பனைமரம்! பனைமரத்தின்அருமை பனையாளிகள் உணர்வார்கள் பனைமரம்: இது அமிர்தஉணவகம் சர்வ உபயோகி. அடி முதல் நுனி வரை அத்தனையும் பயன்படுத்தக்கூடிய மரம். பனைமர வளம் நிறைந்த நாடு தமிழகம். நீர் நிலைகள், குளங்கள் கால்வாய்கள், வயல் வரப்புகள், கடற்கரைகள் அதாவது கடலை ஒட்டியப் பகுதிகள் சிற்றாறுகள், ஓடைகள் மணல் தேரிகளால் சூழப்பட்டிருக்கும். இம்மண் தேரிகளின் மண் சரிவு, மண்அரிப்பு ஏற்படாமல் தண்ணீர் தேக்கத்தை தக்க வைக்க நம் முன்னோர்கள் மண் தேரிகள் சுற்றிலும் பனை மரங்கள் வளர்த்தார்கள். நீர் தேக்கங்கள் பாதுகாக்கப்பட்டது. பனை மரத்தில் ஒரு ஆணி வேர் மற்றும் ஆயிரக்கணக்கான நீர் உறுஞ்சும் சல்லி வேர்கள் காணப்படும். அதிக தண்ணீர் தேக்கம் உள்ள மண், நிலம் அல்லது குறைந்த நீர் உடைய நிலத்திலும் வளரும். வரட்சியிலும் வாடாத மரம் பனைமரம். குளங்கள், ஏரிகள், மழை நீரால் நிரம்பும் அதை சுற்றிலும் வளர்ந்து மண் சரிவு மண் அரிப்பை தடுக்கும் காப்பானாக பொலிவுடனும், பசுமையுடனும் நிமிர்ந்து நிர்க்கும். இவ்வித பொது இடங்களில் காணப்படும் பனைமரங்கள் அரசுடைமை ஆகையால் இதை சாமானிய மக்களால் அழிக்க இயலாது. நீர்த் தேக்கங்களின் கரையில் மண் தேரிகளில் மண் சரிவு, மண் அரிப்பிலிருந்து தடுக்கும் மண் தாங்கியாகவும் அரணாகவும் இதன் வேர்கள் பாதுகாக்கிறது.

பனைமரம் அமிர்த உணவகம் நமக்களிக்கும் பதநீர் சோமரசம். பதநீரை காய்த்து கருப்பட்டி செய்வார்கள். இதன் உபயோகம் உடலுக்கு நன்மையையே செய்யும் மதுரம் நிறைந்த இந்த உணவால் மதுர வியாதி வந்ததாக இல்லை.

பனைமரம் ஆண் மரம், பெண் மரம் என்று உண்டு. ஆண் பனையை அலகு பனை என்றும், பெண் பனையை பருவப் பனை என்றும் அழைப்பர். இரண்டு வகை பனைகளிலிருந்தும் பதநீர் இறக்கலாம். பனை மரம் வளர்ச்சி அடைந்ததும் பாளை வரும். பாளை வந்தததும் பனையாளி மரத்தில் ஏறி பதநீர் எடுப்பர். பனை ஏறுபவர்களை வேந்தியார் என்று அழைப்பார்கள். இவர்கள் தங்கள் தலையில் மகுடம் போன்று வட்ட வடிவ நார் பின்னி தலையில் அணிந்திருப்பார் இதற்கு தலைநார் என்று பெயர். நன்கு அடர்ந்த சுருள் மீசை, அகன்ற மார்பு, பனைமர பட்டையால் செய்யப்பட்ட மார்பு கவசம் இந்த கவசம் பனை மர சிராவால் நெஞ்சில் உரசாமல் பாதுகாக்கும். காலின் கரண்டைகளை சேர்த்து பெல்ட் போல் நார்பின்னி போட்டிருப்பார்கள். இதற்கு ஜண்நார் என்று பெயர். மேலாடை இல்லை முழங்காலுக்கு மேல் அரை வேஷ்டியால் தார் பாய்த்திருப்பார்கள். இடுப்பிலே நல்ல உறுதியான பெல்ட் போன்று பனை நாரால் பின்னிய கயறு அதிலே குறுந்தட்டி, பாளை அறிவாள், பாளை இடுக்கி இவைகள் மாட்டப்பட்டிருக்கும். குறுந்தட்டியில் (குடுக்கை) பதநீர் இறக்குவார்கள். சிப்பி சுண்ணாம்பு வைத்திருப்பார்கள். சுண்ணாம்பு பதநீர் விழும் மண்கலையத்தில் கொஞ்சம் தேய்ப்பார்கள் அப்போது பதநீர் கள்ளாக மாறாமல் தன்நிலையில் இருக்கும். இந்த கலையம் பனம்பாளை பக்கத்தில் மட்டையோடு கட்டப்பட்டிருக்கும். கலையம் பனை நாரால் தூக்க வசதியாக பின்னிய நாரால் தூக்கன்கட்டப்பட்டிருக்கும்.

பனையில் பாளை வரும் பருவத்தில் பாளை வந்ததும் பனை வேந்தியார் பனை மரத்தில் ஏறி பாளை அரிவாளால் பாளையை சீவி பாளை இடுக்கியால் பாளையை மூன்று நாட்கள் நைய்க்க நைய்த்து நான்காம் நாள் பாளையை மண் கலையத்தின் வாயில்

வைத்து பதநீர் கீழே சிந்தாமல் கலையத்தில் மட்டும் விழும்படி மட்டையோடு சேர்த்து நன்றாக கட்டி வைப்பார். பாளை இடுக்கியானது இரண்டு செதுக்கிய மட்டைகள். ஒருபக்கம் இரண்டு மட்டைகளையும் சேர்த்து கட்டியிருக்கும் நுனியானது கத்தரிகோல் போன்று கொஞ்சம் கூர்மையாக இருக்கும். இரண்டு கம்புகளுக்கும் இடையில் சீவிய பாளையை வைத்து நைய்க்க நைப்பார்கள் பின் கலையத்தில் சீவிய பாளையை மட்டையோடு நன்றாக கட்டி வைப்பார்கள் பதநீர் கலயத்தில் சொட்டு சொட்டாக தொடர்ந்து சுரந்து விழும். அடுத்தநாள் காலையில் வேந்தியார் கலையத்தில் இருக்கும் பதநீரை இறக்கி தன் இடுப்பில் கட்டி இருக்கும் குடுக்கையில் ஊற்றி பனையிலிருந்து கீழே இறங்கி இறக்கிய பதநீரை பனை அடியில் இருக்கும் பதநீர் பானையில் ஊற்றி விட்டு அடுத்த பனைக்கும் தொடர்ந்து போய் பதநீர் சேர்ப்பார். தினமும் காலையும், மாலையும் பனைகளில் ஏறி பாளை சீவி இடுக்கியால் நைத்து வரவேண்டும். ஒரு நாள் பாளை சீவாவிட்டால் அடுத்த நாள் பதநீர் சுரக்காது. பனை ஏறுபவர்களின் ஊதியமானது ஒருநாள் பனை உடைமையாளருக்கு பதநீர், அடுத்த நாள் பனை ஏறும் வேந்தியார்க்கு பதநீர் என்ற முறையாகும். மாலையில் கிடைக்கும் பதநீர் மாலை பதநீர். கிடைப்பது அரிது. நுங்கு போட்டு மாலை பதநீர் உடலுக்கு மருத்துவ குணம் உடையதாகும் குளிமையானது.



பதநீர் பருவக் காலத்தில் பதநீரை சூடாக்கி கருப்பட்டி காய்ப்பார்கள். அதிகமான பதநீர் கிடைக்கும் போது பனம்விளையிலேயே குடில் போன்று பனை ஓலையால் பனம் கம்பு, பனம் மட்டையை வைத்து கட்டி அதன் உள் மண்ணால் பதநீர் காய்க்க அடுப்பு செய்து வைத்திருப்பார்கள். இதற்கு விடிலி என்று பெயர் பதநீர் குறையும் போது வீட்டுக்கு கொண்டு வந்து காய்ப்பார்கள். -

--தொடரும்..........



**M.செசீலி ஸ்டீபன்.**
**இராஜாவூர்,செல்:9486356746**

# தேன் - தேனீக்கள்:



"தேன்" தேனீக்கள்....
"தேன்" தேனீக்களால் சேமிக்கப்படுகிற செல்வம் (TREASURE) சமுதாயத்திற்கு

உணவூட்டம் (Nutrition)

**குடியிருப்பு:**

"தேன்" இயற்கையின் இனிய கொடை அரிய வகை உணவு. மருத்துவ குணமுடையது மார்த்தாண்டம் Y.M.C.A. எளிய முறையில் தேனீ வளர்த்தல் பயிற்சி அளித்து வருகிறது. காதிபோர்டு மற்றும் பல தனியார் கூட்டுறவு சங்கங்கள் வழியாகவும் மக்களுக்கு தேனீ வளர்த்தல் விழிப்புணர்வு ஏற்படுத்தியும் பயிற்சி மையங்களில் பயிற்சி அளித்து வருகிறார்கள். சுத்தமான தேன் மார்த்தாண்டம் Y.M.C.A. மற்றும் மார்த்தாண்டம் தேனீ கூட்டுறவு சங்கம் வழியாக கிடைக்கிறது. மார்த்தாண்டம், குழித்துறை கிராமங்களில் ரப்பர் தோட்டங்களில் தேனீ பண்ணை அதிகமாக வைத்த சுத்தமான தேன் உற்பத்தி செய்கிறார்கள். தனியார் கிராம குடும்பங்களிலும் தேனீ வளர்த்தல் ஒரு குடிசை தொழிலாக செய்து வருகிறார்கள். தேனீ வளர்க்க நியூட்டன் தேன் பெட்டிகள் மார்த்தாண்ம் Y.M.C.A. யில் கிடைக்கிறது. தேன் சுலபமாக அதிக விநியோகத்தில் உள்ளது என்பதில் மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. சுத்த தேன் மண்ணில் நனையாது, துணியில் நனையாது, தண்ணீரில் நிறைந்த கண்ணாடி டம்ளரில் கொஞ்சம் தேன் ஊற்றினால் அது வழியில் கரையாமல் டம்ளரின் அடியில் போய்விடும். கரண்டியை வைத்து கலக்கினால் தண்ணீரில் கலந்துவிடும். தேனீக்கள் விவசாயிகளின் உதவிகரம். பூக்களில் நெக்டர் எடுக்கும் போது பல எண்ணங்களின் பூக்களில் போகும் அவைகளின் கால்கள் இறக்கையில் ஒட்டும் மகரந்த பொடிகள் பல பூக்களில்படுகிறது. செயற்கை மகரந்த சேர்க்கையினால் விவசாயிகளுக்கு பயிர்களின் பலன் அதிகமாகிறது. மா, பலா மரங்கள், ரப்பர் தளிர்விடும் நேரம் பூக்கள் மலரும் நேரங்களில் தேன் பெட்டிகளை வாடகைக்கு வாங்கி தோட்டங்களில் வைக்கிறார்கள். அதிகமான பலன் அடைகிறார்கள். தேனீ வளர்ப்போம்!!! இனிமையான தேன் உண்போம்!!! தேனீக்கள் போன்று சுறுசுறுப்பான உயர்குடி குடியிருப்பாக வாழ வாழ்த்துக்கள்!!!






## 11ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

சொந்தஊர்:கூடங்குளம்,
திருநெல்வேலி மாவட்டம்

# D.செல்லதுரை நாடார்

**பிறப்பு: 12.12.1943**
**இறப்பு:5.5.2013**
**என்றும் உங்கங் நினைவுடன்...**

**மனைவி: சி.செல்வராணி,**
**மகள்கள்:** C.Anbarasi Dyna,
C.Kalaiyarasi Reena,
**மகன்கள்:** C.Duraisamy, C.Jaya

Bharathi, C.Seshan 154/2 (Ground Floor), 5th Avenue, West Colony, ICF, Chennai-38.
Cell:98408 00565.

# வா...வியாபாரி ஆகலாம்

## 14.சங்கடம்

அமுதா B.பாலகிருஷ்ணன்



சங்கடம் என்றால்...

பெரிய பெரிய சங்கடங்கள்

சின்னச் சின்ன சங்கடங்கள்

சில தர்மசங்கடங்கள்... இப்படிப் பல வகையாக வரும்.

சங்கடமே வராத வாழ்க்கையுமல்ல, வியாபாரமுமல்ல. வியாபாரம் கத்துக்க வந்த நமக்குப் பல சங்கடங்கள் வரும்,

வியாபார ஸ்தலத்துக்குள்ள நம்மை அனுமதிச்ச முதலாளிக்கு அதைவிட அதிகமாக வரும்.

என்ன செய்யணும்...?

சமாளிக்கணும்!

சங்கடம்ங்கிறதே ஒரு இக்கட்டான சூழ்நிலை, நமது திறமைக்கு விடப்பட்ட சாவலனுதானே அர்த்தம்.

அப்போ .... சவாலே சமாளி!

பெரிய பெரிய சங்கடங்களைப் பிளான்போட்டு (திட்டம் போட்டு) சாளிச்சிடலாம்.

சின்னச் சின்னச் சங்கடங்களை அப்படியும் இப்படியும் உருண்டு புரண்டு சரிக்கட்டிடலாம்

சில தர்மசங்கடங்களை எப்படி சமாளிப்பது?

முதல்ல, தர்ம சங்கடம்னா என்ன....?

சின்னச் சின்ன சிக்கல்கள், "டக்" கென்று முடிவெடுக்க முடியாத சூழ்நிலை, இப்படியும் செய்ய முடியாம அப்படியும் செய்ய முடியாம சிக்கித் தவிக்கிறது... எல்லாம்தான்

நாம இன்னைக்கு லீவு கேட்டுட்டு ஒரு இடத்துக்குப் போயிட்டு வரலாம்ன இருப்போம், கண்டிப்பாக வந்துடறேன்"னு தகவல்கூட சொல்லியிருப்போம்.

அந்தச் சமயத்தில்தான், முதலாளி நம்மைக் கூப்பிட்டு, ஒரு முக்கியமான வேலையைக் கொடுப்பாரு.

"நீ போனாத்தான் அது சரியா வரும், வேற யாரையும் அனுப்பினா சொதப்பிட்டு வந்துருவான்"-னு சொல்றான்று வைச்சுக்குவோம்,

நம்ம பாடு தர்ம சங்கடம்தான்...!

இதைத் தவிர்ப்பதற்கு என்ன செய்யணும்..?

"நாளைக்கு கண்டிப்பா வாரேன்"னு நம்ம இஷ்டத்துக்கு சொல்லக்கூடாது.

"சரி, எங்க முதலாளிகிட்ட லீவு கேட்டுப் பாக்குறேன்."னு சொல்லி, முன்னமேயே முதலாளிகிட்ட லீவு கேட்டு வச்சிக்கணும்.

சில வீடுகளில், "யம்மோ... நான் சினிமாவுக்குப் போயிட்டு வாரேன்"-னு டிப் டாப்பாக டிரஸ் பண்ணிட்டு வந்து நிற்பான் பையன்.

"அப்பா வீட்ல இல்லிய - அப்பா வந்தபிறகு கேட்டுட்டு, நாளைக்குப் போ"

"யம்மா... என் பிரண்ட்ஸ் எல்லாம் அங்க காத்துகிட்டு நிற்கிறாங்க, நாளைக்குப்போன்னு சொல்றியே...என்னம்மா இது"

"என்ன... என்னம்மா இது, நீ முதல்லேயே அப்பாகிட்ட கேட்டு வைச்சிருக்கணும், இப்படி புறப்பட்டு வந்துட்டு போயிட்டு வாரேன்னா என்ன அர்த்தம், சும்மா ஒப்புக்குச் சொல்லிட்டுப் போக வந்திருக்கேன்னுதான அர்த்தம்".

இந்த வாதம் இப்படியே போய், கடைசியில இரண்டு போக்குமே மனஸ்தாபம் தான் சங்கடம்தான்.

நாம, அந்த பையன் மாதிரி நடந்துக்கலாமா? கூடாது. ஒரு கடையில வியாபாரம் மும்முரமா நடந்து கிட்டிருக்க,

குமாஸ்தா ஒருவன் வந்து, "முதலாளி எங்க சித்தப்பா வந்திருக்காரு, டிரஸ் எடுக்கணுமாம், என்னைக் கூட்டிட்டுப் போனாத்தான் நல்லா செலக்ட் பண்ண முடியும்னு என்னைக் கூப்பிடுறாரு போயிட்டு வரட்டுமா"-ன்னு கேட்டான்.

"இப்போ வியாபார நேரத்துல போணுங்கிறியே, அதுவும் பகல்ல பதினோரு மணிக்கு கூட்டமாயிருக்கிற நேரத்துல..., அப்படியே போணும்னாலும் சாயங்காலம் கூட்டமில்லாத நேரத்துல போ"

"சாயங்காலம் சித்தப்பாவுக்கு வேலையிருக்காம், அதான் காலையிலே வந்துர்றேன்னு சொன்னாரு, நானும் சரி வாங்கன்னு சொல்லிட்டேன்"

"ஒஹோ... இது நீங்க ஏற்கனவே போட்ட பிளான் தானா... நீங்கதான் காலையில வியாபார நேரத்துல வர்றத்துக்குச் சம்மதிச்சீங்களாக்கும், அதுவும் என்னைக் கேளாமலேயே சரின்னு சொல்லிட்டீங்களாக்கும், உங்க சித்தாப்பாவுக்கு அவரு வேலை முக்கியமாக்கும், உங்களுக்கு உங்க வேலை முக்கியமில்லயாக்கும்... அப்போ சரி... நீங்க டிரஸ் எடுக்க போக வேண்டியதுதான். உங்க டிரஸ்சையும் சேர்த்தே எடுத்துட்டுப் போங்க, போய் பெட்டிய எடுத்துட்டு வாங்க சம்பளத்தையும் வாங்கிட்டுப் போங்க... உங்க சித்தப்பா கூடவேயிருங்க"-ன்னு முதலாளி "மூட் அவுட்" ஆகிவிடுவார்.

இப்படியொரு தர்ம சங்கடமான சூழ்நிலையை உருவாக்கலாமா..!?

ஒரு ஆத்திரம் அவசரத்துக்கப் பரவாயில்லை, திடுதிப்புன்னு ஒருவர் வந்து, உங்க சொந்தக்காரங்க ஒருத்தருக்கு, "ஒரு இது" உன்ன உடனே கூட்டிட்டு வரச்சொன்னாங்க"ன்னு சொன்னால், "எங்க முதலாளி கிட்ட கொஞ்சம் விபரமாச் சொல்லுங்க, நானும் கேட்கிறேன்"-ன்னு சொல்லி, விபரத்தைச் சொல்லி மௌனமா நின்னாலே அந்த முதலாளி உடனே அனுப்பிவைப்பாரு.

ஊரைச் சுத்தணும், துணியெடுக்கணும், கோயிலுக்குப் போகணும், குளத்துக்குப் போகணும்னால் முன்கூட்டியே "பெர்மிஷன்" வாங்க வேண்டாமா...?

எடுத்தேன் கவிழ்த்தேன்னு வந்து நின்று தர்ம சங்கடத்தை உருவாக்கலாமா...? கூடாது....

முதலாளி மனசுல, நல்ல இடத்துல இருக்கிற நாம, அதைக் கடைசி வரைக்கும் காப்பாத்துறதுல கவனமா இருக்கணும்.

முன் கூட்டியே "பெர்மிஷன்" வாங்கணும்,..

சரி...அதுக்காக.,

"அண்ணாச்சி அடுத்தவாரம் வெள்ளிக்கிழமை எனக்கு லீவு வேணும்

எதுக்கு...?

"எனக்கு வயித்த வலிக்கும், அதுக்குத்தான்"-னு கேட்கக்கூடாது.

சரி, மூணு நாளைக்கு முன்னாடியே அனுமதி வாங்கி லீவு கேட்டாச்சு.

இன்னைக்கு லீவு போட்டுட்டு, சித்தப்பா கூட போக வேண்டிய நேரம்,

அந்த நேரம் பார்த்து முதலாளிக்கு ஒரு போன் வருது.

அவசரமா போகவேண்டிய நிர்ப்பந்தம், அவருக்கு.

முதலாளி இல்லாத நேரத்துல நாமதான் நிர்வாகத்தைப் பொறுப்பா பார்த்துக்க வேண்டிய நிலைமை,

நம்மைத்தேடி சித்தப்பாவும் வந்தாச்சு,

இந்தச் சங்கடமான சூழ்நிலையில என்ன பண்றது...?

முதலாளிக்காக, நாமதான், நமது சொந்த நலனைத் தியாகம் பண்ணணும்.

நம்மைத் தேடிவந்த உறவுக்காரங்ககிட்ட, "சித்தப்பா... எங்க முதலாளி எனக்கு அன்னைக்கே லீவுதாரேன்னு நல்ல மனசோட சொன்னாங்க, ஆனா எதிர்பாராத விதமான அவங்க இப்ப ஒரு இடத்துக்குப் போக வேண்டிய சூழ்நிலை, அவங்க இல்லாதப்போ நான்தான் பொறுப்பா கடையைப் பார்த்துக்க வேண்டியிருக்கு, அதனால நான் இப்போ உங்ககூட வரமுடியாத நிலையில இருக்கேன். நாம இன்னொரு நாள் போலாமா, அல்லது உங்களுக்குத் துணைக்குக் கடையில உள்ள, ஒரு பையனை, விபரம் தெரிஞ்ச பையனை அனுப்பி வைக்கட்டுமா?" ன்னு பவ்யமாக் கேட்டால், சித்தப்பா புரிஞ்சுக்குவார், பெருந்தன்மையான சித்தப்பாவா இருந்தால், "யப்பா, உன்னை நினைக்கும்போது எனக்குப் பெருமையாயிருக்கு, நீ எப்படியும் நல்ல நிலைமைக்கு வருவே"ன்னு வாழ்த்தவும் செய்வார்.

அதுமட்டுமல்ல, முதலாளிக்கும் நம்மீது ஓர் அளவுகடந்த அன்பும், பாசமும் விரிவடையுமே!

விரிவடைந்தால் மட்டும் சங்கடங்களே வராதா?

வரும்... எப்படி..?

Owned at Published by K.M.JULIAN from 21, Krishnappa Naickan Street, Mettupalayam, Chennai-33 and Printed by K.M.JULIAN at "NEW MERIT PRINTERS" No: 14/51, Reddykuppam Road, Saidapet, Chennai-15. Editor K.M.JULIAN.


WE'RE BIG ON FUN
Reach levels of fun and fantasy never before experienced. Regale in a holiday experience filled with high energy entertainment at one of India's largest amusement park.
THRILLING INTERNATIONAL RIDES
WATER RIDES, WAVE POOL & WATER FALLS
MARYWORLD FOR KIDS
AMPHITHEATRE AND ENTERTAINMENTS
AMPLE CAR PARKING, RESTAURANTS
AND POWER BACK-UP
MGM
Dizzee World
East Coast Road, Muttukadu
M.G. Muthu Group
FOR DETAILS CALL
+91-44-27472129 / 27472131
9790955554 / 9500063716 / 17
www.mgmdizzeeworld.com

Regd.No.TN/CC(S) DN/112/2024-2026
Registered Newspaper RNI 55354/1992
Posted at Egmore RMS-1, Partrika Channal Posted on 7.5.2024
PUBLISHED ON FIRST OF EVERY MONTH WPP Licence No.TN/PMG(CCR)/WPP 315/24-26

If underlivered please return to INDIAN NADARMURASU
21,Krishnappa Naiyakan Street,
Mettupalayam, Chennai-600 033.

# எட்டாம் ஆண்டு நினைவு அஞ்சலி



## S.கயல்விழி B.Tech.,MBA.,
## 25.06.1990 -29.05.2016

நீ வாழ வேண்டிய வயதில்
வாடிய மலராகி உதிர்ந்து
போன உன்னை எங்களால்
மறக்க முடியுமா...
என்றும் உன் நினைவில் வாழும்.

உன் அம்மா : S.தமிழரசி
உன் அப்பா : S.சுந்தரராஜ்.
உன் சகோதரன் : S.பாஸ்கரன் B.E.,
உன் அண்ணி : B.செல்வராணி M.Sc., M.Ed.,